— Page — No — 297 —

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 14	சுபகிருது௵ வைகாசி௴	வருட சந்தா
இதழ் : 2	மே—ஜூன் 1962	ரூ. 3-00



இந்திரன் பழியைத் தீர்த்த இறைவன்

சித்திர விளக்கம் 2. பக்கம் 53

உள்பொருள்

		பக்கம்
1.	பஞ்சாம்ருத ரஸம் (திருப்புகழ்மணி) ...	49
2.	இந்திரன் பழி தீர்த்தது (கி. வா. ஜகந்நாதன்) ...	53
3.	குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ...	58
4.	"புலவரை ரட்சிகரும்" திருப்புகழ் விரிவுரை (குகஶ்ரீ) ...	64
5.	போர் வேலன் (கி. வா. ஜ.) ...	74
6.	சரணாகதி (குயில்) ...	76
7.	எளுசிய கீதை (ரஸபதி) ...	85
8.	நக்கீரர் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.,) ...	92
9.	HARMONY OF THE WORLD (*Thiruppugal Mani*) ...	95

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தா செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 14	சுபகிருது௵ வைகாசிமீ மே—ஜூன் 1962	இதழ் 2

பஞ்சாம்ருத ரஸம்
(திருப்புகழ் மணி)

மயிலென்பது ஓங்காரம். அதிலேற இரண்டு படிகளுண்டு. முருகா! குகாவென்று சொல்லிக் கொண்டு ஒருபடியி லேறலாம் மற்ற நாமங்களைச் சொல்லிக் கொண்டு இன்னொரு படியி லேறலாம். இரண்டு படிகளும் ஒரே இடத்தில் சேர்கின்றன. " ஆன தனிமந்திர ரூபநிலை கொண்ட தாடு மயிலென்ப தறியேனே " என்றார் அருணகிரியார்.

தனி மந்திரமே ஓங்காரம். " அக்ஷரங்களுக்குள் " " ஓம் நானு யிருக்கிறேன் " என்றான் கண்ணன். ஓம் என்ற பிரணவத்தில் அகரம் நானென்றான். அகரம் சேராமல் எந்த எழுத்தையும் உச்சரிக்க முடியாது.

ஓங்காரத்தில், அகர வொலிக்கும் மகர வொலிக்கும் நடுவில், உகரவொலி இருக்கிறது. அகர உகர மகரங்களினு லானதுதான் ப்ரணவம். " அகார

எத்தனையோ துன்பங்கள எய்தியும், நல்லறத்தில்
சித்தம் சிதையாத பாண்டவர்கள் சீரியரே.

காரணத்திலே அனேகனேக ரூபமாய் – உகார காரணத்திலே உருத்தரித்து நின்றதே – மகார கார ணத்திலே மயங்கி நின்ற வையகம் - சிகார காரணத் திலே தெளிந்ததே சிவாயவே என்றார் சித்தர்.

அகர வொலியிலிருந்து பல எழுத்துக்களும் சொற்களும் தோன்றியது போல, அகரத்திலிருந்து பல ரூபங்களாகி உகரத்தில் உருத்தரித்து நிற்கிறானும் மனிதன். மகரத்தில் தான் வேறு, ஆண்டவன் வேறு என்று மயங்குகிறான். சிகரத்தில் தெளிந்து தானே சிவமென் றறிகிறான்.

பிரணவமாகிய ஓங்காரத்திலிருந்து ஐம்பத்தொ ரக்ஷரங்கள் ஏற்பட்டன. ஆனால், தலையிலெழுத்து ஐம்பத்தோ ரக்ஷரங்களா லெழுதப்பட்டதல்ல. ஐம்பத்தோ ரக்ஷரங்கள் அழியாதது போல அவ் வெழுத்தினால் எழுதப் பட்டிருந்தால் மனிதனும் சாகா மல் ஆநந்தத்தில் இருப்பான்.

துன்பத்தைத் தரக்கூடிய பைசாச வெழுத்தா லெழுதப்பட்டதே பிரம்மலிபி. முருகாவென் றழைத் தால், அவனோடிவந்து பிரம்மாவினா லெழுதப்பட்ட பைசாச வெழுத்தாகிய பிரம்மலிபியைத் தன் பாதங் களினா லழித்துவிட்டு, ஓங்காரத்தை எழுதிவிடுவான்.

மனிதன் ஆசா பாசங்களாகிய துன்பத்தி லழுந்தி அழிகிறான். அப்படி யழுந்தி வருந்த வேண்டாம்; எழுந்திரு என்று எழுப்புவதே எழுத்து. எழுந்தால் வினையின பளு குறையும். எழுத்து உள்ளிருந்து எழும்புகிறது. அகரமுதல் ஐம்பத்தோ ரக்ஷரங்களினா லானது திருப்புகழ்.

அறங்கொண்ட வீடணற்(கு) ஆயுள் பெருக,
மறங்கொண்ட ராவணனார், மாய்ந்தகதை ஓரேமோ.

அருணகிரியாரைத் திருப்புகழ் பாடும்படி விநாயகர் எழுப்புகிறார். துன்பத்தில் அழுந்தியவனை எழுப்புவது ஐம்பத்தோ ரக்ஷரம்.

கடப்ப மாலையினால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறான் முருகன். அம்மாலை வேண்டுமென்று ஆசைப்பட்டாள் வள்ளி. முருகனை யடையும் முயற்சி கைகூடும் என்பதற் கடையாளமாக மாலையை வேண்டினாளாம். அருணகிரியார் தன்னையே வள்ளியாக நினைத்து கடப்பமாலை தரும்படி முருகனை வேண்டுகிறார்.

"மருக்குலாவிய மலரணை கொதியாதே, வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே, கருக்குலாவிய அயலவர் பழியாதே, கடப்ப மாலையை இனிதர வரவேணும்" என்ற திருப்புகழ் இதன் கருத்தை விளக்குகிறது.

மனம் உலக வாழ்க்கையி லேற்படும் இன்ப துன்பங்களில் அகப்பட்டு வாடுகின்றது. வாடாமலிருக்க திருப்புகழ் பாடவேண்டும்.

தத்துவங்களைப் பற்றிச் சண்டைக்கு நிற்கவேண்டாம். அதற்கு நமக்கு அவகாசமில்லை. ஆண்டவனை நினைத்து பஜனை செய்வதே ஆசையற்ற வழி. திருப்புகழ் பாடி முருக நாமத்தைப் பஜிக்க வேண்டும்.

திருப்புகழ் பாடினால் சமத்துவம் வரும். சமத்துவமற்றவனுக்கு மோக்ஷம் கிடைக்காது. எல்லாவற்றிலும் முருகனைப் பார்ப்பதே சமத்துவம். அப்பனே செய்பதி யென்னும் வயலூர். வந்தவர்களை யெல்லாம் முருகனுகக் கருதி நன்மை செய்யும் நன்செய்ப் பதியே வயலூர். "செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக்கருள்கை மறவேனே" என்றார் அருணகிரியார். அந்த வூரில்தான் அருண

நீறில்லை, ருத்ராக்க நேர்மையில்லை, சாக்கியனார்
தேறு வழிபாட்டில், தெளிவுபெற்ற தற்புதமே.

கிரியாரைத் திருப்புகழ் பாடும்படிப் பணித்தாராம் விநாயகர்.

தலையிற் சிறந்தது வணங்கு தலையே. ராமனுடைய தலை வணங்கு தலையாம். சிறியவர்கள் ஒன்றை வேண்டிப் பெரியவர்களை வணங்குகின்றனர். பெரியோரோ, சிறியோர்களிடமுள்ள கருணையினால், அவர்களை வாழ்த்தவேண்டி தலைவணங்கி யிருக்கின்றனர். அவ்வணக்கம் விநயத்தினாலும், கருணையினாலும் ஏற்பட்டதே.

ஆண்டவன் கருணை பொழிந்துகொண் டிருக்கிறான். நம் வாழ்த்து அவனை யடைகிறது. நாம் வாழ்த்தினால், ஆண்டவனை நம்மிடம் இழுக்கிறோம். ஆண்டவன் தன் கருணையினால் நம்மை யிழுக்கிறான். அவனும் நாமும் ஒன்றாகிறோம். முருகனுடைய இன்பம் உலகத்தில் எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுக்கும். ஒன்றும் விரும்பாமல் திருப்புகழ் பாடினால் நமக்கு வேண்டியதைப்பற்றி முருகன் கவனிப்பான்.

சிவரஸம், கந்தரஸம், கிருஷ்ணரஸம், அபேதமான பக்திரஸம், திருப்புகழ் பாடித் தொண்டர்கள் அனுபவிக்கும் ஆனந்தரஸம் முதலிய பஞ்சாம்ருத ரஸமே திருப்புகழிலிருக்கிறது. திருப்புகழைப் பாடினால் அந்த ரஸத்தை யுணரலாம். திருப்புகழைப் பாடும் பஞ்சாம்ருத ரஸத்தில் திளைப்போம்.

சுபம்.

வேள்விசெய்தும், தட்சன்தலை ஆடானான்; மேலோர்சொல்
கேள்வி மதிமறுத்த கீழ்மையினால், என்பாரே.

இந்திரன் பழிதீர்த்தது

[கி. வா. ஜகந்நாதன்]

இந்திரன் ஒருநாள் தன் சிங்காதனத்தில் அமர்ந்து தேவ மகளிர் ஆடும் கூத்தில் உள்ளத்தைப் போக்கி ஈடுபட்டிருந்தான். அப்போது தேவ குருவாகிய வியாழபகவான் வர, அவரைக் காணுமல், ஆடல் மகளிர்மேல் வைத்த கண் வாங்காமல் இருந்தான் இந்திரன். அது கண்டு தேவகுரு சினந்து உடனே புறப்பட்டுப் போய்விட்டார். தன்னுடைய செல்வ வாழ்வு குறைவது போன்ற ஒரு தோற்றம் ஏற்பட, அதைக் கண்டு இந்திரன் துணுக்குற்றுக் குருநாதர் வந்து போன செய்தியை அறிந்தான். உடனே அவர் இருக்கையை அடைந்து பார்த்தான்; அங்கே அவர் இல்லை. வேறு இடங்களில் தேடிப் பார்த்தும் அவரைக் காணவில்லை. அதனால் வருந்திய அவன் நான்முகனிடம் சென்று நடந்தவற்றைச் சொன்னான். நான்முகன், "துவஷ்டா என்பவன் தந்த மகனாகிய விசுவரூபன் என்பவனை நீ குருவாகக் கொள். அவன் மூன்று தலையை யுடையவன. அசுரகுலத்தில் வந்தாலும் அறிவால் மிக்கவன்" என்றான்.

இந்திரன் விசுவரூபனைப பணிந்து தன் குருவாக ஏற்றுக் கொண்டு, தேவர்களுக்கு நலம் உண்டாக ஒரு வேள்வி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். மூத்தலைக் குரவன் அப்படியே வேள்வி செய்யத் தொடங்கினான். ஆனால் உள்ளத்தில் அசுரர்களுக்கு நலம் உண்டாக வேண்டுமென்ற விருப்பத்தோடு அதனைச் செய்யலானான். அதனை உண்முகப் பார்வையால் உணர்ந்த இந்திரன் தன் வச்சிரப்படையால் விசுவரூபனின் தலைகள் மூன்றையும் தறித்தான். அதனால் பிரமகத்தி இந்திரனை வந்து பற்றிக் கொண்டது.

கம்பர் சடையப்ப வள்ளலைப் போற்றுகவி,
நம்புகின்ற நன்றி நலமென்பர் நல்லோரே.

அப்போது இந்தப் பாவ விளைவைத் தேவர்கள் முயன்று மரத்தின்மேலும் மண்ணின்மேலும் மாதர்பாலும் நீரின்பாலும் புகும்படி செய்தார்கள். மரத்தில் பிசினாகவும், மண்ணில் உவராகவும், மாதரிடம் பூப்பாகவும், நீரில் நுரையாகவும் அப்பாவம் கழிந்தது. அவை, "இந்தப் பழி சுமந்த எங்களுக்கு இதனால் வரும் நன்மை யாது?" என்று கேட்க, "மாதர் கருவுயிர்க்கும் அளவும் தம் கணவரோடு இன்புறும் நிலையை அடைவார்கள். மண்ணை அகழ்ந்த குழி நிரம்பும். நீர் இறைக்க இறைக்க ஊறும். மரம் வெட்ட வெட்டத் தழைக்கும்" என்றார்கள்.

இந்திரன் மாசுதீர்ந்த மணிபோல விளங்கினான். விசுவரூபன் தந்தையாகிய துவஷ்டா தன் மகனை இந்திரன் கொன்றதை யறிந்து சினந்து, தேவர்கோனை அழிக்க எண்ணி ஒரு வேள்வி செய்தான. அவ் வேள்வியிலிருந்து விருத்திராசுரன் என்பவன் எழவே, அவனைத் துவஷ்டா இந்திரன்மேல் ஏவினான. அவன் இந்திரனோடு பொருதான். இந்திரன் அவனோடு எதிர் நிற்கமாட்டாமல் ஓடினான்.

என் செய்வதென்று வருந்திய இந்திரன் பிரமனையும் அழைத்துக் கொண்டு திருமாலை அணுகித் தன் நிலையை எடுத்துச் சொன்னான். "உன்னுடைய வச்சிரப்படை பழையதாகி விட்டது. இனிப் புதிய படையை நீ பெருவிட்டால் விருத்திராசுரனை அழிக்க ஒண்ணாது. பாற்கடல் கடைந்த காலத்தில் தேவர்கள் தங்கள் படைகளைத் ததீசி என்ற முனிவனிடம் ஒப்படைத்தார்கள். பின்பு அவர்கள் திருப்பிக் கேட்கவில்லை. அவற்றை அம்முனிவன் யோக சக்தியினால் விழுங்கினான். அவை உருண்டு திரண்டு அவனுடைய முதுகந்

மணந்தாளை நீங்கி,மயல் மாதவிபால் கொண்டு,
பிணங்கிய கோவலனார், பெற்றபயன் என்னேயோ ?

தண்டாக இருக்கின்றன. அதனைப் பெற்றுப் படையாகக் கொண்டால் நீ அசுரனை வெல்லலாம்" என்றார் திருமால்.

அவர் அறிவுரையின் படியே ததீசி முனிவரை அடைந்து வணங்கி வேண்ட, அவர் தம் உடம்பினாலும் பிறருக்கு ஒரு பயன் இருக்கிறதே என மகிழ்ந்து யோக சக்தியினால் உயிரை விட்டார். இந்திரன் அவர் முதுகந்தண்டை வாங்கி, விசுவ கர்மாவிடம் கொடுத்து வச்சிரப்படை யாக்கிக் கொண்டு விருத்திராசுரனிடம் சென்று அறைகூவினான். இருவருக்கும் போர் நிகழ்ந்தது.

இந்திரன் தன் கையிலிருந்த வச்சிரப்படையை எடுத்து வீசியவுடன் அஞ்சிய அசுரன் கடலுக்குள் போய்ப் புகுந்து கொண்டான். இந்திரன் பிரமனுடைய அறிவுரையின்படி அகத்தியனை அணுகி வணங்கி, அசுரன் கடலில் மறைந்ததைச் சொன்னான். உடனே அம்முனிவரன் சிவபிரானைத் தியானித்துக் கடல் நீரைக் கையில் எடுத்து ஆசமனீயம் செய்துவிட்டான். வற்றிய கடலில் விருத்திராசுரன் ஒரு மலையின்மேல் ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்ட இந்திரன் அவன்மேல் வச்சிராயுதத்தை வீசிக் கொன்றான். அதனால் இந்திரனைப் பிரமகத்தி தோஷம் பிடித்தது. அது அவன்பால் வந்து பலவகையில் துன்புறுத்தவே அவன் அஞ்சி ஒரு குளத்துக்குள் புகுந்து தாமரைத் தண்டிலுள்ள நூலுக்குள்ளே மறைந்து நின்றான். இந்திரன் இல்லாமல் தேவலோகம் பொலிவிழந்தது.

அப்போது நகுஷன் என்பவன் பல வேள்விகளைச் செய்தமை கண்டு அவனைத் தேவ மன்னனாக வைத்து முடி சூட்டினார்கள் தேவர்கள். அவன் சிங்காதனம் ஏறியவுடன், "இந்திராணியை அழைத்து வாருங்கள்" என்று உத்தரவிட்

காலத்திற் பஞ்சவர்க்குக் காப்பளித்த மச்சர்கோன்,
ஞாலத்தார் போற்றும் ஞயமெய்து கின்றானே.

டான். ஏவலர் அவளிடம் சென்று மன்னனுடைய கட்டளையைச் சொல்ல, அவள் திடுக்குற்று வியாழபகவானை அணுகிப் புலம்பினுள். "என் கணவன் இருக்க, மற்ருெருவன் என்னை விரும்புவது முறையாகுமா? நான் என் செய்வேன்!" என்று அரற்றினுள். தேவகுரு அவளுக்கு ஆறுதல் கூறி, "ஏழு முனிவர்கள் சிவிகையைத் தாங்க அவன் உன்னிடம் வந்தால் அவனையே இந்திரனுக ஏற்றுக் கொள்ளலாம்" என்ருர். இந்திராணி தன் இருக்கை சென்று இப்படி வருக வென்று சொல்லி யனுப்பினுள்.

நகுஷன் அப்படியே ஏழு முனிவர்களையும் தன் சிவிகையைத் தாங்கச் செய்து அதில் ஏறிப் புறப்பட்டான். முன் தண்டை அகத்தியன் சுமந்து வந்தான். காமத்தால் அறிவு கலங்கிய நகுஷன் அகத்தியனை நோக்கி, 'விரைவாகப் போக' என்று சொல்வானுய், வடமொழியில், "சர்ப்ப, சர்ப்ப" என்ருன். அகத்தியனுக்குச் சினம் மூண்டது. "நீ சர்ப்பமாகுக" என்று சபிக்க அவன் அவ்வாறே பெரிய மலைப் பாம்பாக மாறிப் புரளலானுன்.

தேவர்கள் அரசனின்றி மனம் வருந்தி வியாழபகவானிடம் சென்று முறையிட்டார்கள். தேவகுரு இந்திரன் ஒளித்திருந்த வாவியை அடைந்து அவனைக் கூப்பிட்டார். அவன் வெளியே வரவே, பிரமகத்தி மறுபடியும் பற்றிக் கொண்டது. தேவகுரு மண்ணுலகில்தான் இந்தப் பழி தீரவேண்டுமென்று சொல்ல, இந்திரன் தேவரும் குருவும் உடன்வர மண்ணுலகத்துக்கு வந்து தென்திசையில் இருக்கும் கடம்பவனம் என்னும் இடத்தைக் குறுகிக் கொண்டிருந்தான். அப்போது அவனைப் பற்றியிருந்த பிரமகத்தி அவனை பிரிந்து வேருகத் தனி நின்றது.

வயதிளமை எண்ணுமல், வாழும் தவம் வளர்ப்பார்;
நயதுருவ மண்டலத்தை நண்ணுபவர் என்றறியே.

அதுகண்டு வியப்புற்ற இந்திரன், " இவ்விடத்தில் ஏதோ சிறப்பு இருக்கவேண்டும். போய்ப் பார்த்து வாருங்கள்" என்று சிலரை அனுப்பினன். அவர்கள் சென்று திரும்பி வந்து, " சிறிது தூரத்தில் ஒரு பொய்கையும் அதன் மருங்கில் கடம்ப வனமும் அதன நிழலில் சிவலிங்கம் ஒன்றும் உள்ளன" என்று சொன்னார்கள்.

இந்திரன் பேரார்வம் உந்த அவ்விடத்தை அடைந்து சிவலிங்கப் பெருமானைக் கண்டு அளவற்ற ஆனந்தம் கொண்டான. கீழ் விழுந்து வணங்கினன். உடனே மனத்தில் எண்ணியபடி தேவருலகத்தி லிருந்து விமானம் ஒன்று வந்தது. அதை அங்கே அமைதது நிழல் செய்தான. அப்பால் அருகிலுள்ள வாவியில் பொற்றாமரை ஒன்று பூத்திருப்பது கண்டு அதனைப் பறித்துப் பூசை செய்தான். அந்தப் பொய்கைக்குப் பொற்றாமரை வாவி என்ற பெயர் அன்றுமுதல் வழங்கத் தொடங்கியது.

பலபடியாக ஆராதனை செய்து வழிபட்டான் இந்திரன். தன் பிரமகத்தி தோஷம் அந்த எல்லையைக் குறுகியவுடன் நீங்கிய மகிழ்ச்சியினல் உருகினன்.

" அங்கணா போற்றி வாய்மை ஆரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி ஆதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கள் நாயகனே போற்றி ஈறிலா முதலே போற்றி."

என்று துதி பாடினன. அப்போது இறைவன் " ஒவ்வோராண்டும் சித்திரா பௌர்ணமியன்று நீ வந்து அருச்சனை புரிவாயாக! ஆண்டு முழுதும் வழிபட்ட பயன் கிடைக்கும்" என்று அருளினன். இந்திரன் வணங்கி விடைபெற்றுத் தேவலோகம் சென்று பழையபடியே அரசாட்சி செய்யத் தொடங்கினன்.

இளையான் குடிமாறர், இன்மையுற்ற நாளில்,
இளையாது செய்யறத்தை, எணணுமனம் இன்புறுமே.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B A., B.T)

ஷடக்ஷர பதயே நமோ நம:

ஷட் + அக்ஷர — ஆறு — எழுத்துக்களின் ;

பதயே - தலைவனுக்கு ; நமோ நம: — போற்றி ! போற்றி !

மந்திரங்கள் :

கருதியவற்றைக் கருதியபடியே கைகூட்டி வைக்க உதவுவன மந்திரங்கள் எனப்படும். இவை, இறைவனருளால் ஆக்கல் அழித்தல் முதலிய ஆற்றல் கைவரப் பெற்ற அநுபவ ஞானிகள ஆணையில் தோனறின.

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மெனப "

என்பது இலக்கண நூல். இவர்கள் ஆசானுரைத்த வண்ணம் ஆண்டவனது அருமைத் திருவுருவை உள்ளக் கிழியில் முதலில் அழகொழுக எழுதிக் கொண்டு, அவனது திருநாமங்களு ளொன்றைத் தாம் பெற்ற உபதேச முறைப்படி எண்ணி உபாசிப்பர். அவ்வாறு பலகாலம் செய்து, தாம் பெற்றபயனை உலகினரும் பெற்றுய்யுமாறு பல மந்திர வகைகளை அருளிப் போந்தனர்.

ஆறெழுத்து மநு :

அவற்றுள் குமார பிரானுக்கு உரிய மந்திரங்கள் பல உள. சில குமார தந்திரம் என்ற நூலகத்தில் மநதிரோத்தாரண படலத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவையன்றி மேலும் சில அநுபூதிமான்களாலும் அறிவிக்கபபட்டுள்ளன. ஆயினும், செவ்வேள் பரமனுக்குத் திருமுகம் ஆறு ஆனாற்போல், அவ

தன்தலையில கைவத்துத் தானழிந்தான் பஸ்மசுரன் ;
தன்செருக்குக் கூடாது, தாரணியில் என்றறியே.

ஏனைய மந்திரங்களில் தலை சிறந்தது ஆறெழுத்து என்ற ஷடக்ஷரமே யாம்.

பேதையால் வந்த பிழை :

ஷடக்ஷரம் என்பது ஷட் + அக்ஷரம் என்ற இரு சொற்கள் கூடிய ஒருமொழி. இவை வடமொழி இலக்கணப்படி புணரும்போது ஷட் + அக்ஷரம்—ஷடக்ஷரம் என்றே வரும். ஷடாக்ஷரம் என்று ஒருபோதும் புணரா. சிலர் ஷடாக்ஷரம் என்றே சொல்லுவதும் எழுதுவதும் வழக்கத்தில் வந்த வழுவாகும். இவ்வழு வொழிப்பைக் காண்டலும் அரிது என்பர் பாம்பனடிகள்.

ஆறெழுத்து எது ?

ஷடக்ஷரம் என்றால் ஆறெழுத்து என்று பொருள். அதுவே சரவணபவ: எனபதாம். சர + வந + பவ எனப் பிரிக்கப்படும்போது, 'ர' கரத்தின் முன் வந்த 'ந' கரம் ஒருமொழிக் கண்ணதாயின் 'ண' கரமாய்த் திரியும் என்ற வடமொழி விதிபற்றி 'ந' 'ண' ஆயிற்று. மந்திரமாக உச்சரிக்கும் போதும் இந்த 'ண' கரம் பொருந்தவே உச்சரிக்க வேண்டும். நார + அயநம் எனப் பிரிக்கப்படும் நாராயண சத்தம் மந்திர முறையில் ஓம் நமோ நாராயணய என உச்சரிக்க நிற்றலும் உணர்க என்பர் பாம்பனடிகள்.

ஆறெழுத்தின் பொருள் :

சரவணபவ: என்றால நாணல் புல் (நிறைந்த) பொய்கையில் தோன்றியவன என வடமொழியில் பொருள்படும். சரம் - நாணல், வநம் - செறிவு, நீர். எனவே, நாணல் சூழ்ந்த பொய்கையில, பவ: உதயமானவன என்க. ஆயினும்

சொனனசொல் காவாப பாஞ்சாலன துரோணரால்,
என்னுனுன் ? ஈதெண்ணி, ஏற்றமுறு வார்உளரே.

இதில் உள்ள ஒவ்வோ ரெழுத்தும் தனித்தனியே வேறு பொருளையும் தரும்.

ச — மங்களம்,
ர — ஒளி, கொடை
வ — சாதவிகம்
ந — (நலம்தரும்) போர் (என்ற இவற்றோடு)
பவ: — உதயமானவனே

என்றும், மேலே சொன்ன மங்களம் முதலியவற்றை அடியவர்கட்குத் தோற்றுவிப்பவன் எனவுமாம்.

ஷடக்ஷர செபத்தின் பயன் :

" சகல ஜன வசியமாம் ச காரத்தாலே
தன முதலாய் அழைத்துவரும் ர காரத்தாலே
செக முழுதும் மோகிக்கும் வ காரத்தாலே
செத்தவரைப் பிழைப்பிக்கும் ண காரத்தாலே
பக வசி நோய் அகற்றுவிக்கும் ப காரத்தாலே
பகைத்தவரைக் கொல்லுவிக்கும் வ காரத்தாலே
இகபரமும் எழுத்தாக உச்சரித்தால்
இறைவனருள் கடாக்ஷத்தி னியல்புதானே "

" முடிப்பான் நினைத்தபடியே தபசுகள் முத்திபெறத்
தொடுப்பான் சர்வகலை ஞானபோதச் சுருதிமுதல்
அடுப்பான் இருதயத்து ஆறெழுத் தோதிட ஞானவருள்
கொடுப்பான் குமரன் கொடாமலிரான் அன்புகொண்
[டெமக்கே "

அடைக்கலம் என்றபுரு ; ஆதரித்த மன்னன்
நடையுணரும் மக்கள்,இன்றும் நானிலத்தி லுள்ளனரே.

"வருவான் மனத்துள் வசமா யிருப்பன் வசனமது
குருவா யுரைப்பன் தமிழ்க்கவி மாலைகள் கூறும்படிப்
பெருவா ரிதியெனும் ஆறெழுத் தோதப் பெருமையது
தருவான் நமக்குத் தராமலிரான் செந்திற் சண்முகனே"

"பத்தியும் ஞானமும் பரவிடும் மார்க்கம்
எத்தனையோவகை இருக்கினும் இகத்தில்
முத்தி தந்து அநுதினம் முழுப்பலன் நல்கச்
சத்திய மாவது சரவணபவவே" —(திருவலங்கல்)

"காறு கெட்ட கந்தனுல்
ஊறு அறுக்க வுள்ளநீ
வேறு எழுத்தை வெஃகுறேல்
ஆறெழுத்தை அன்றியே —(திருவலங்கல்)

"ஏமருள் சவ்வும் ரவ்வும் வவ்வும்—எங்கோமான்
மாமலி ணவ்வும் பவ்வும் வவ்வும்—எங்கோமான்
(திருவலங்கல்)

எனவரும் ஆன்றோர் வாக்குகளா லறியலாம்.

ஷடக்ஷரச்சிறப்பு:

ஷடக்ஷர மந்திரத்தைப் பற்றி நமது பாம்பனடிகளார் கூறியுள்ளதை இனிப் படியுங்கள் :—

"ஐந்து முகம் ஆறுமுகமாயினாற் போல் ஐந்தக்கரத்துடன் முப் பிரணவத்தையும் ஐக்கியம் செய்துள்ள நாதப் பிரமமாகிய மூலமும் சேர்ந்து, ஓம் நமசசிவாய" என நிற்பது தானே "சரவணபவ" என எழுந்த மோக்ஷ மந்திரமாகிய புராதன தாரகப் பிரமமெனும் ஆறெழுத்தாயது. அதனால் அவ்வாறெழுத்துக்கும் உடையவன் சரவணபவன் என்க. இக்கருத்தினை,

---

தனக்கென்று வாழாத் தகுதியால், நெல்லிக்
கனிஔவைக் கீந்(து,) அதிகன் கண்டபுகழ் எண்ணுவமே.

" நன்முக மிருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகியுற்ற தாரகப் பிரமமாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத்து ஓரா றெழுத்தென உற்ற அன்றே "

என வரும் கந்த புராணத்தானும் அறிக. இவ்வாறெழுத்தையுமே ஷடக்ஷரம் என்பது. இவ்வாறெழுத்துக்கள் ஏனைய எழுத்துக்களைப் போன்ற வடிவுற்றிருப்பினும் அவைகளைப் போல்வனவல்ல. திருட்டாந்தம், சிதாபாச ஜீவனாகிய மனிதன் தேவனைப் போன்ற வடிவுளனாயினும் அந்தத் தேவனாகமாட்டான் என்று கூறுக. ஆறெழுத்தாயுள்ள இந்த மஹாமநுவைத்தான் வள்ளி தெய்வயானை யென்னும் பிராட்டிகளிருவரும் பூர்வத்தில் செபித்தார்களெனச் சம்பவ காண்டம், 36-ம் அத்தியாயத்து 93-ம் சுலோகத்தில் " ஸ்ரீஸுப்ரமண்ய ஷடக்ஷர மகாமந்திரத்தைப் பத்தியுடன செபித்துக் கொண்டு " என்னும் வாக்கியங்களா லுணர்த்துகின்றது "

ஆறெழுத்துப் பற்றிய ஐய நீக்கம்:

திருமுருகாற்றுப் படை யுரையில் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் 'நமக்குமராய' என்பது சடக்கரம் என வரைந்துள்ளனர். இதனால் இது தான் மூல மந்திரமோ என்று ஐயம் எழக்கூடும். மந்திரம் இரு வகையினது என்பர் மேலோர். அதாவது நாம மந்திரம் என்றும் மூல மந்திரம் என்றுமாம். நாம மந்திரம் வெறும் பெயரளவாக நிற்பது; வாயினால் பாடத தக்கது. மூல மநதிரம் மானதமாக அதாவது மனத்துக்குள் தியானிக்கத் தக்கது. இவ்விரு வகையில் 'நமக்குமராய' எனபது வெறும் நாம மந்திரமே. இது பற்றியன்றோ மூல மந்திரமாகிய (சூக்கும சடக்கரமான) பிரணவப் பொருளைச் சரவணத் தனயனிடம் கேட்கப் புகுந்த சங்கரர்,

அச்சமிலா தெச்சில்கனி, அன்பால் தருசபரி,
நிச்சயித்தே தன்மனத்தை, முனனர்நிவே தித்தாளே.

"நாதா குமரா நம என்று அரனுர்
ஓதாய் என ஓதியது எப்பொருள்தான் ?"

என்ற அநுபூதி வாக்கின்படிக் 'குமார நம' என வாய் விட்டுச் சொல்லியதனை நோக்குக. மேலும் 'குமார நம' என்ற திரு மந்திரம் வாக்கினுல் ஓதத் தக்கது என்றும், அதனை ஓதுவார் பெறும் பயனையும்

"குமாரநம என்று கூறினுர் ஓர்கால்
அமரா வதியாள்வ ரன்றி—யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்"

என்று சிதம்பர சுவாமிகள் குறித்ததும் சிந்திக்கத் தக்கன.

மேலும், சகரமோடு ஆருன ஷடக்ஷரமான மூல மந்தி ரத்தை, அடியார்கள் சித்தத்தில் வைத்து செபிக்கின்றனர் என்பதைப் பழநித் திருப்புகழில்,

"பணியும் அடியார் சிந்தை மெய்ப்பொருள தாகநவில் சரவணபவா" என்று நமது அருணகிரி அண்ணல் அருளு கிருர். பிறிதோரிடத்தும்

"ஆசையிற்கை கலந்து சும்மா சும்மா பவ
சாகரத்து எழுந்தி எழா எழா துளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகா எனும்—வகை வராதோ"

என்பதும் உன்னுக. விரிவஞ்சி விடப்பட்டது.

ஷடக்ஷரம் பற்றிய விளக்கம் பாம்பனடிகளருளிய திரு வலங்கற்றிரட்டு, சிவஞான தீபம், தகராலய ரகசியம், சுப்பிர மணிய வியாசம் என்ற நூல்களிலும், மற்றும் ஆறெழுத்தலங் காரம் என்ற நூலிலும் பரக்கக் காணலாம். இவ்வித சிறப் பினை உடைய ஆறெழுத்துக்கிறை அதனைப் பக்தி பிறங்கச் செபிப்போர்க்கு எல்லா நலனும் அருளுவன் எனபது உறுதி. ஆகலின், (ஆறக்கரத் தலைவனுன) ஷடக்ஷரபதயே நமோநம: (சரவணபவ போற்றி ! போற்றி !!) எனப் போற்றியவாரும்.

சிக்கல்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

புல்வரை ரட்சிக் குந்தாரு வே!மது
ரிதகுண வெற்பொக் கும்பூவை மார்முலை
பொருபுய ! திக்கெட் டும்போயு லாவிய புகழாளா !
பொருவரு நட்புப் பண்பான வாய்மையி
னுலகிலு னக்கொப் புண்டோவெ னுநல
பொருள்கள நிரைத்துச் செம்பாக மாகிய கவிபாடி
விலையில்த மிழ்ச்சொற் குன்போலு தாரிகள்
எவரென மெத்தக் கொண்டாடி வாழ்வேனும்
வெறிகொளு லுத்தர்க் கென்பாடு கூறிடு மிடிதீர
மிகவரு மைப்பட் டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும்பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றாத வாழ்வையு மருள்வாயே !
இலகிய வெடசிச் செந்தாம மார்புய
சிலைநுதல் மைக்கட் சிந்தூர வாணுதல்
இமயம கட்குச் சந்தான மாகிய முருகோனே !
இனையகொ டிச்சிக் கும்பாக சாதன
னுதவுமொ ருத்திக் குஞ்சீல நாயக !
எழிலியெ ழிற்பற் றுங்காய மாயவன் மருகோனே !
அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசைதொறு முப்பத் தேன்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமளி விசையாலே
அழகிய சிக்கல் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரு
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமானே !

கன்னகியை வானவர்கள் கண்டு வணங்கும்நிறை,
என்னிச் சிலம்புநூல், இன்பமுறு கின்றதரோ

(பதவுரை.) (இலகிய............முருகோனே !)

இலகிய வெட்சி செம் தாம மார் புய - (ஒளியும் மணமும் அழகும்,) விளங்குகின்ற சிவந்த வெட்சி மாலை தொங்கி அசையும் தோளும் மார்பும் உடையவனே !

சிலை நுதல் மைக்கண் சிந்தூர வாள் நுதல் இமய மகட்கு சந்தானம் ஆகிய முருகோனே - வில் (போல் வளைந்த) புருவமும், (கருநிற) மை தீட்டிய கண்களும், குங்குமம் ஒளிர்தரு நெற்றியுமான இமய (மன்னன்) மகளான உமைக்கு மகவான இளம் பரிபூரணா !;

(இளைய............மருகோனே !)

இளைய கொடிச்சிக்கும் பாகசாதனன் உதவும் ஒருத்திக்கும் சீல நாயக - இளம் பருவ மலைநாட்டு வள்ளிக்கும், இந்திரன் தந்த ஒப்பற்ற தேவயானைக்கும் வைதிக கணவனாக வாய்த்தவனே !;

எழிலி எழில பற்றும் காய மாயவன் மருகோனே - கார்முகில் அழகைத தனதாக் கவர்ந்த திருமால் மருகா !

(அலர்தரு............சிங்கார வேலவ !)

அலர்தரு புட்பத்து உண்டாகும் வாசனை திசைதொறும் முப்பத்து எண்காதம் வீசிய - மலரும் மலர்களில் விளைந்த மணம், (எண்) திசையிலும் பரவி, பல காத தூரம்வரை பரிமளிக்கின்ற,

அணி பொழிலுக்கு சஞ்சாரம் ஆம் அளி இசையாலே - நலமுடைய சோலைகளில் நடமாடும் வண்டுகளின் (இராக) சஞ்சாரத்தால், (பொழிலுக்கு - பொழிலின்கண் ; இது உருபு மயக்கம்.)

அழகிய சிக்கல் சிங்கார வேலவ - அழகமைந்த சிக்கல் பதியில் எழுந்தருளிய சிங்கார வேலா !;

அருந்ததித தம்பதிகள் அனபுகொண்டு வாழ்ந்து,
விருந்தினராய் விண்ணில, விளஙகிமிளிர் கினருரே.

(சமரிடை ....பெருமாளே !)

சமரிடை மெத்தப் பொங்காரம் ஆய் வரும் அசுரரை வெட்டி சங்காரம் ஆடிய பெருமாளே - போர்க்களத்தில் பெரிதும் பொங்கி வரும் (வீணர்களான) அவுணர்களை வெட்டி (வீழ்த்தி), சாந்தியை விளைவித்த (பெருமிதமான) பெரிய பொருளே ! (சங்காரம் - ஆன்ம தாபத்தை அகற்றுதல்.)

(இப்படியெல்லாம் உம்மைப் போற்றுமல்),

(புலவரை............மிடிதீர.)

புலவரை ரட்சிக்கும் தாருவே - கற்றவர்களைக் காப்பாற்றும் கற்பகமே !

மதுரித குண வெற்பு ஒக்கும் பூவைமார் முலை பொருபுய - இதமான சுகம் விளைக்குங் குன்றுபோல, குவிந்த மெல்லியலார் குயங்களில் (உருண்டு புரண்டு, கலவிப்) போர் நடத்தும் (கனக மலைத்) தோளினனே !

திக்கு எட்டும் போய் உலாவிய புகழாள - எட்டுத் திசைகளிலும் பரவிப் பவனிவரும் (உயர்ந்த) புகழை யுடையவனே !;

பொருவு அரு நட்புப் பண்பு ஆன வாய்மையில் - ஒப்பு சொல்லுதற்கு அரிய நட்புக் குணம், (அதற்கு உரியது) ஆன வாய்மை என்பவைகளில்,

உலகில் உனக்கு ஒப்பு உண்டோ எனு - உலகத்தில் உனக்குச சமமானவர்கள் உளரோ என்று,

நல பொருள்கள் நிரைத்து செம்பாகம் ஆகிய கவி பாடி - வளமான பொருள்களை வரிசைப்படி அடுக்கி, (எளிது பொருள் விளங்க) பக்குவமான சிறந்த கவிகளைப பாடி ;

விலை இல் தமிழ்ச் சொற்கு உன்போல் உதாரிகள் எவர் என மெத்தக் கொண்டாடி - விலை மதிக்க முடியாத (பயனுள)

மார்க்கண்டர் ஆயுளுற்ற மாபெரும் செயதி,யுயர்
நீரமை, பெருந்தவத்து நேர்மையென எண்ணுதியே.

தமிழைப் பாதுகாப்பதற்கு, உன்னைப் போன்ற தர்மிஷ்டர்கள் எவருளர் என்று, பயனிலா உயர்வு வெளிப்படப் பாராட்டி,

வாழ்வு எனும் வெறிகொள் உலுத்தர்க்கு என்பாடு கூறிடும் மிடி தீர - (என்றும் இந்த) வாழ்வு (இப்படியே இருக்கும்) எனனும் வெறியர்களான (சில) செல்வர்கள் இடத்தில், என சிறுமையை (அடுக்கி) முறையிடும் (அநியாய) வறுமை (அடியோடு) அழிய, (கூறிடல் - படலம் படலமாகக் கூறுபடுத்தி யுரைத்தல்.)

(மிக அருமை.........வாழ்வையும் அருள்வாயே !)

மிக அருமைப்பட்டு - அளவிலாத சிரமம் அடைந்து, உன் பாத தாமரை சரணம் எனப் பற்றும் பேதையேன் மிசை - உமது திருவடிக் கமலங்களை அடைக்கலம் எனப் பற்றியிருக்கும் அடியன் இடத்தில்,

விழி அருள் வைத்து - (பரம) அருள் நோக்கம் பாலித்து, குன்றுத வாழ்வையும் அருள்வாயே - (என்றும்) மங்காத (பேரின்ப) வாழ்வைப் பெற அருள், (எ - று).

விரிவுரை :

பகைநாட்டுப் பசுக்களைக் கவரும் படை வீரர்கள், தனிப் பெரும் வெட்சியைத் தரித்து வருவர் ; இது புறப்பொருள் மரபு. ஆணவ ஆட்சியில் அடங்கிய உயிர்களை, அகப்படுத்துகின்ற அத்தர் நீர். விளங்கும் உமது வெட்சி மாலை, அந்த அகப்பொருள் குறிப்பை அறிவிக்கின்றதே ! அக்கோலமும் கொள்கையும் அறிநது,

'இலகிய வெட்சிச் செந்தாம மார்புய' என்று, போற்றி உம்மைப புகழ்கிறோம்.

சிவததிருக் குறிப்பை, சதா சிந்திப்பவள் சாம்பவி. புனித தேவியின் புருவங்கள், அதனுல் எப்போதும் மேல் நோக்கி

இறந்தார் கதியடைய, எணணி முயன்ற
சிறந்த பகீரதனை, சிந்தைசெய்வர் மேலோரே.

யிருக்கின்றன. அத்தேவியின் மலர்க் கண்களில் தீட்டிய மையும், நெற்றியில் விளங்கும் குங்குமமும், நித்திய மங்கலை நிமலை எனலை நினைவூட்டுகின்றன.

வானோங்கிப் பனிமலை வளர்ந்துளது. அது தவத்தர் தங்கும் தனிமலை. அம்மலை தந்த மகள் அம்பிகை. அத்தற்பரி தந்த தநயர் நீர். தாய்போல் சேய் எனும் பழமொழிக்குத் தக்கபடி, இளமையும் மங்கலமும் எய்திய உமமை,

'இமய மகட்குச் சநதானம் ஆகிய முருகோனே' என்று, கூவி யழைத்துக் கும்பிடுவம்.

இரக்கம் அற்றவர் எனினும், முருகா என்றதும் உருகும் உளத்தினர் வேடுவர்கள். அவர்கள் வளர்த்து அளித்த வள்ளியார், சரியை கிரியை சார்பவர்.

இந்திரன், போக லோக பூபதி. அவன் தந்த அமுத மகள், யோக ஞான நாகங் கொண்டவர். அந நாற்பேற்றின் நம்பர் நீர்; அதை அகில உலகிற்கும் அறிவிக்க, இரு தேவி யர் நடுவில் இருக்கின்றீர். உயர்நத உமது சீலத்தை, உத்தம தேவியர் இருவரும் உணர்ந்துளர். அதனாலதான்,

'கொடிச்சிக்கும்............உதவும் ஒருத்திக்கும் சீல நாயக'! என்று உணர்ந்து நெகிழ்ந்து ஓதுவம்.

பர்யங்கி யோக வாழ்வே இல்லற நல்லறம்; அது நலஞ் சிறந்த யோகிகள் நடை. தேவியருடன், அதை நீர் அவர் கட்கு காட்டுகின்ற கருணையர். ஆஹா! 'சீல நாயகன்' என்று அஞ்சிச் சிந்திபபதுதான், உம்மை வந்திக்கின்ற வழிமுறை.

கைம்மாறு கருதாத மேகம்போல், கருநிறமான திருமாலை, 'எழிலி எழில் பற்றும் காயர்' என்பம்; (எழிலி - மேகம்.) அளவில்லாத மாயைகளை ஆட்சி செய்யும் அவரை, 'மாயவன்' என்றும் கூறி மகிழ்வம். காயத்தாலும் மாயத்தாலும் சிறந்த

காணாதா னைச்சுட்டிக் காண்பித்த சம்பந்தர்,
வாணாளில், யாவர்க்கும் வாழவழி காட்டினரே.

அவரது மருகர் என்று, உம்மை, இப்படியே அழைக்க ஆவலிக்கும் எமது மனம்.

பார் முழுதும், பொதியத் தென்றல் பரவுகிறது. அது போல், முற்றுகை யிட்ட முதன்மைச் சோலைகளின் மலர் மணம், முப்பத்தெட்டுக் காதம்வரை, பரவி எங்கும் பரிமளிக்கின்றது. அது, இன்றைய கணக்கில் 380 கல் தூரம். (இத் தலவிருட்சம், மல்லிகைச் செடி என்பதும் இங்கு எண்ணத் தகும்.)

வளம் நிறைந்த அச் சோலைகளின வண்டுகள், பயனுன தேனைப் பருகுகின்றன. இன்பம் மிகுந்து இசை எழுப்புகின்றன. அந்த ஏழு சுரங்களின சஞ்சாரம், அடடா! என்ன இன்பகரம்!

சோலை வளமும், மலர்களின் மணமும், வண்டின் இசையும் சேர்ந்து சிறப்பெய்திய பதி சிக்கல் எனப்பெறும். கோல வாமனப் பெருமாள், வெண்ணெய்ப் பிரான் எனும் சிவத்துடன் கோயில கொண்ட தலம் இது. "வேலை வீழ்த்திட்ட வெண்ணெய்ப் பெருமானடி, ஞானமாக நினைவார் வினை ஆயின நையுமே" என்று ஆளுடைய பிள்ளையார் ஒரு பதிகத்தில் அறிவித்த அருமையை, அறியாதார் எதுவுமே அறியாதார். பயனுன தலங்கள் பன்னிரண்டுள், இது ஒன்று என்று, பாடுகின்றுர் சுந்தரர். ஆ! சிக்கல் சிறப்பை, ஓத ஒருநாப் போதுவதோ?

சைவ வைணவ சமரசம் கண்ட சால்புடைய தலம் இது என்று, அறிந்து மகிழ்கிறது அன்பர் மனம்.

சீர் கெட்ட எங்கள் வாழ்க்கையில், சிக்கல்கட்கு அளவில்லை. ஒன்று போனுல் மற்றென்று. அதுபோனுல் இனி

இவனையிவன் தந்தைபெற, எத்தவத்தைச் செய்தானே?
சிவனே! எனநினைக்கும் செய்கையரும் உள்ளனரே.

ஒன்று. அட வேதனையே! என்றுமா இத்தொல்லை! இது என்ன பாபம்! இது எவரிட்ட சாபம்! ஐயோ! ஐயோ என்று, அங்கமெலாம் புண்ணாக, வாழ்க்கை முழுதும், அலறுகிறது பாழும் மனம்.

பொல்லாத இச்சிக்கல் தொல்லைகளைப் பொறுக்க முடிய வில்லையே! சிக்கல் இறைவா! சிவ குமரேசா! என்று அலறிக் கூவி அழைக்கும் பொழுது, ஏன்! ஏன் என்று எதிர் வருவை! மருள் வாழ்வில் சிக்கி மயங்குவதைத் தவிர்த்து, அருள் வாழ்வில் சிக்க வைத்து ஆளாக்கிக் கொள்வை!

போரில் அவுணர்கள் பொங்கி வந்தபோது, அவர்களை வெட்டி வீழ்ததி, சாதுக்கட்கு சாந்தி யளித்த வரலாறுகள், சிக்கல் பல தவிர்த்த சிறபபுத்தான்.

1. கவிஞர் நடுவிருந்து அவர்கட்கும், அவர்கள் மூலம் மற்றவர்க்கும், வழிகாட்டுபவர் நீர்.
2. கற்பகம்போல் முன்வந்து நிழல் தந்து காப்பவர் நீர்.
3. இச்சை கிரியை எனும் தேவியர் நடுவிருந்து, உயர்ந்த சாந்தியை உதவுபவர் நீர்,
4. எங்கும் நிறைநதது உமது புகழ்; அது ஒன்றே திரும் புகழ்; அருட்புகழ்.
5. காண முடியாத, கருத இயலாத, ஆத்ம பந்துவா யிருந்து அருள்பவர் நீர்.
6. எமக்கு அபராதம் புரியின் சகிப்பேம்;
   எம் அடியார்க்கு அபராதம் புரியின் சகிக்க மாட்டேம்

என்று கந்தபுராணத்தில் அருளிய வாய்மையை, என்றும் காத்த இயல்பினர் நீர்.

கண்ணப்பர் கண்ணப்பிக், காண்பித்த பக்தியினை,
எண்ணும்போ தெல்லாம், இதயநெகிழ் கின்றதுவே.

7. தமிழால் வைதாரையும், மகிழ்ந்து வாழ வைப்பவர் நீர். ஊன்றி இந்த அருமையை உணர்ந்து, உம்மைப் போற்றிப் புகழ்ந்து வாழ அறியாத ஒரு சிலர், வாழ்க்கைச் சிக்கலில் வருந்துவா ராயினர்.

இந்த வாழ்வு இப்படியே இருக்கும் என்று, எண்ணியிருக்கும் செல்வர் ஒருவர். அவர் மோசம் பல செய்து முதலாளியானவர். கைங்கர்யம் சில செய்து, விரிவாக அதை விளம்பரப் படுத்தி வியாபகம் ஆனவர்.

வறுமையிற் சிக்கி வாடியவர் ஒரு புலவர். வாழ்த்துப்பா பாடி வயிறு கழுவுவது அவர் வழக்கம். அவர் மேற்கூறிய ஆரவார செல்வரை அணுகினார். கைகொடுப்பார்; இவர் நம்மைக் கரையேற்றுவார் என்று கருதினார். கூப்பிய கைகளால் அவரைக் கும்பிட்டார்.

புலவரை ரட்சிக்கும் தாருவே! என்று முதலில் போற்றினார். கற்பகத் தருவே என வேண்டும்; அல்லது தருவே என்றாலும் தவறில்லை. வறுமை அச்சத்தையே வளர்த்திருப்பதனால், செல்வர் முன்னிலையில், மொழிமுதல் நீண்டு, தாருவே என்று வார்த்தை தவறி வருகிறது.

எதிரில் இருந்த செல்வர், ஏறிட்டு நோக்கினார். இது தான் சமயம் என்று,

'மதுரித குண வெற்பொக்கும் பூவைமார் முலை பொருபுய' என்று போற்றினார்.

வெய்யிற் காலத்தில் குளிர்ந்து, மழைக் காலத்தில் கதகதப்பாகிற இனிய அனுபவம், குயங்களின் குணம். அதை, 'மதுரித குணம்' என்று அறிவித்தார். மதியிழந்த ஆடவரை வெருட்டி மருட்டும் எடுப்பு நோக்கி, 'வெற்பொக்கும்'

முதுகெலும்பைத் தா!என்ற இந்திரனார் முன்னே
ததீசிதந்த நல்லருள்தான், தக்கவர்கள் பண்பாடே.

என்றூர். மைஞளைப் போன்ற குரலும், மென்மையும் கொண்ட மெல்லியலாரை, 'பூவைமார்' என்று புகழ்ந்தார். மதுரித குணமும் வெற்பொத்தும் இருக்கும் குயங்களில், விரகப் போர் விளைவிக்கும் மலைபோலும் தோளினனே என்று அவர் பாடிய பொழுது, அற்ப சகவாசம் அதிகமுடைய சீர் கெட்ட செல்வர் சிரித்தார்.

இதுதான் சந்தர்ப்பம் என்றறிந்த போலிப் புலவர், 'திக் கெட்டும் போய் உலாவிய புகழாளா!' என்று, பரிந்த குர லெடுத்துப் பாடினூர்.

கலகல என்று நகைத்தார் கனதனவான். நட்பிற்குப் பாத்திரர் நீர். உமக்கு ஒப்பான வாய்மையர் இன்றைய உலகில் இல்லை, இல்லை என்று, இப்படி யெல்லாம் 'பொய் பிறந்தது புலவர் வாயிலே.'

இவ்வளவும் கேட்ட செல்வர், அந்நேர உபகாரமாக, ஏதோ ஒரு சில உதவினூர். பல்லெலாம் தெரியச் சிரித்த பாவலர்,

'விலையில் தமிழ்ச்சொல்லிற்கு, உன்போல் உதாரிகள் எவர்? என மெத்தக் கொண்டாடி' விட்டுப் போயினூர்.

மொழிவாழ்வில் முன்னேறி, சமய வாழ்க்கையிற் சார்ந்து சாந்திபெறும் சால்புடையாரை, திருவருள் சார்பினர் என்ற தீர்மானததில், பாடிப் புகழ்வது பழைய அறம். அதற்கு மாறாக,

'வாழ்வு எனும் வெறிகொள் உலுத்தர்'களை, அற்பப் பொருட்கு ஆவலித்து, அவரிடம் இல்லதைப் புனைந்து பாடி னூல், அது இறப்ப உயர்ந்த ஆனந்த உவமை என்றாகி, பாடினூ ரும் வாழார்; பாட்டுடைத் தலைவனும் தாழ்வு அடைவான்.

(ஆநந்தம் தங்கரமாயின் இன்பம்; நனகரமிட்டு ஆனந்தம் எனில், மரணம் என்ற பொருளாகும்; இல்லதை

* திருமூலர் மந்த்ரம் தெய்வ ரகசியமாம்;
அருளாளர் ஆய்ந்தே, அதன்பயனைக் கண்டாரே.

அதிகம் ஏற்றி உரைத்த மரண உவமையை, இறப்ப உயர்ந்த ஆனந்த வுவமை என்பர்.)

இப்படியே புலவர்கள் சிலர், தகாதாரைப் பாடித் தடுமாறிய வரலாறுகள் பலவுள.

அகத்தாலும் புறத்தாலும் தூய்மை அழிந்தவர்களே, உலுத்தர் என்பது வழக்காறு. அவர்களைப் பாடுவதன் அடிப்படை, அறிவில் வறுமை யுறுவதுதான்.

சிக்கல் சிங்கார வேலா! மாபெரும் உன் சந்நிதியை மறந்து, உலுத்தர்தம் கடைவாயிலில் காத்திருந்து, பாட வேண்டிய மின்னைப் பாடாமல், பாழும் வாயால் அவர்களைப் பாடுவது 'என்பாடு கூறிடல்' என்று ஆகும். (பாடு - அறியாமை.)

அந்த அறியாமை வறுமை அகல, ஒரே ஒரு வழிதான் உளது. அது, உமது திருவடியேகதி என்று அடைக்கலம் ஆவது. அறிவு நெறியறிய அடியேன் அரும்பாடு பட்டேன். 'தஞ்சம் தஞ்சம், சிறியேன மதி கொஞ்சம் கொஞ்சம், துரையே அருள்' என்று உம்மிடம் சரணாகதி யாயினன். அடியேன்மேல் கண்ணருள் காட்டு ஐயா! தளராத பேரின்ப வாழ்வைத் தா ஐயா! ஐயா! என்று, வீழ்ந்து வேண்டி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

அன்பார்ந்த தம்பியென, அன் றுகுக னையழைத்தான்,
இன்பத்தால் ராமன் ; பணியெண்ணும் ஏற்றமிதே.

போர்வேலன்

(கி. வா. ஜ.)

முருகனுடைய திருவருளைப் பெறுவதற்கு ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி தம்மிடம் உண்டா என்று சோதனை செய்து கொள்கிறார் அருணகிரியார். நாம் கேட்கவேண்டிய கேள்வியை அவர் கேட்கிறார்.

முருகன் திருவுள்ளம் கொண்டால் வேல்விழி மங்கையர் மையலை மாற்றிவிடலாம். மஙகையர் தம் விழியாகிய வேலால் மயக்கத்தை உண்டாக்குகிறார்கள். முருகனோ தன் கையி லுள்ள வேலால் அஞ்ஞானத்தைப போக்குகிறான். மாயையின் மகனாகிய சூரனை வேரோடு தொலைத்தது அந்த வேல். அத னைத தியானம் செய்தால் எந்த மயக்கமும் தீர்ந்துவிடும். மலை யின் உருவமாக இருந்து உலகுக்குத் தீஙகுபுரிநதுவந்த கிரவுஞ் சாசுரனையும் அவ்வேல் பொடியாக்கிவிட்டது. மாயையின் மகனைக் கொன்ற வேல் விழிவேலால் வரும் மயக்கத்தைப் போக்குவது அரிதன்று. குனறை யழித்த அது குன்றுபோன்ற நகிலால்வரும் மோகத்தை மாற்றிவிடாதா!

ஆகவே, கூர்வேல் விழியையும் அதனையுடைய மங்கையர் கொஙகையையும் எண்ணியவுடன், அவற்றால் விளையும் துன் பத்தை மாற்றும் பரிகாரம் இதுதான் என்ற எண்ணமும் உடன் தோன்றியது. வேலைத் தியானிப்பதுதான் தக்க பரிகாரம். அது சூர் வேரையும் குனறையும் தொளைத்தது. பெரிய பெரிய போர்களில் பகைவர்களை அழித்த நெடுவேல் அது. நெடும் போர்வேலை யுடையவன் மோகத்தையும் தீர்த்து ஆட் கொள்வான்.

மனிதன் சிறிய ஆற்றலை யுடையவன். அவனுக்குத் துன் பம் உண்டாக்கப் பெரிய பொருள் வேண்டும் என்பதில்லை. விழியும் நகிலுமே அவனை வீழ்த்தி விடுகின்றன. ஆனால் இந் திரனோ பெரிய ஆற்றலை உடையவன. முப்பத்து முக்கோடி தேவர்களுககுத் தலைவன். வசசிரப்படையை ஏந்தியவன். அவனுக்கு வந்த இடையூறு மிகப் பெரிது. அதனை முருகன் தான் நீக்கினான். புரநதரனாகிய இந்திரன் தேவலோக ஆட்சியை மேற்கொண்டு தலைதருக்கி நின்றான். தன்னிலும் வலிமை யுடையாரும் பெரியாரும் இல்லையெனறு செம்மாந்

குருவுரைத்தார் எனபதற்காக் கொள்விரலை வெட்டித்
தரும்வேடன் சீர்த்தி, தரணியறிந் துள்ளதுவே.

திருந்தான். சூரபன்மன் தோன்றினன். தேவர்களுக்கு இடுக்கண் செய்தான். இந்திரனைப் பதவியினின்றும் ஓட்டினன்.

இந்திரனும் தேவர்களும் முருகனிடம் முறையிட்டார்கள். அவன சூரபன்மனை மாய்த்து மீட்டும் தேவர்களுக்கு வாழ்வு அளித்தான். இந்திரன் மீண்டும் அரசாட்சியை மேற்கொண்டான். முன்போல் தருக்கோடு ஆளவில்லை. தேவலோக அரசாட்சிக்கு உண்மையான தலைவன முருகன்தான் என்று அவன் இப்போது மனத்தில் எண்ணி வாழ்கிருன். அவனுடைய பிரதிநிதியாகத் தான் இருநது பணிசெய்வதாகவே அவன நினைதது முருகனை வழிபடுகிருன. ஆகவே உண்மையில் இந்திரனுக்கும் மேலான அரசனாக இருப்பவன் முருகன். இந்திரன் மனனன் ; அவனுக்கும் மன்னனாகிய சக்ரவர்த்தி,

சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே !

என்று அருணகிரியார் பாடுகிருர். சூரனையும் கிரௌஞ்சாசுரனையும் அழித்த ஞானசக்திதரன், மங்கையரின் விழியாலும் நகிலாலும் வளரும் மோகத்தைப போக்கி யருள்வான என்ற நம்பிக்கையோடு இதனைச சொன்னூர். "ஆண்டவனே, எனக்குத் தகுதி யிலலாவிட்டாலும் நீ ஞானசக்தியாகிய வேலையுடையவனாயிற்றே ; என் மயலைப் போக்கி ஆண்டருள வேண்டும்" என்பது குறிப்பு.

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வேன், அருள்சே ரவும்எண் ணுமதோ ?
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே !

["கூரிய வேல்போன்ற விழிகளையுடைய மாதர்களின் கொங்கையிலே சேரும் மயலை உடைய அடியேன் நின் திருவருளை அடைய எண்ணும் அவ்வெண்ணமும் தக்கதோ ?

சூரபதுமனுடைய மூலத்தோடு கிரௌஞ்சாசுரனாகிய மலையும் தொளைபடச் செய்த நீண்ட போரில் பொலியும் வேலாயுதக் கடவுளே, இந்திரனுக்கும் மேலான மன்னனே !

எணணும் அதோ... எண்ணும் அது பொருந்துமா ? வேர்-சூரன் குலமுழுவதும் கெட்டதை எண்ணியது. பூபதி-அரசன்.]

சிரஞ்ஜீவிப பட்டம், சிறந்தபணி மூலம் ;
நிரந்தரக் காதைபல நீணிலத்தில் நிற்கிறதே !

" சரணாகதி "

(குயில்)

எதிர்த்த கலியாண வீட்டிலிருந்து நாதஸ்வர நாதம் காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. கேட்பதற்கு இனிமையாக இருந்தபோதிலும் என்னைப் பொறுத்தவரையில் வேதனையை கிளப்பிவிடும் கீதமாகத்தான் அது ஒலித்தது. என்னையும் அறியாமல் என் கண்கள் ஜன்னல் வழியாக எதிர்த்த வீட்டை நோக்கின. அழகாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் சூரிய ஒளி நிரம்பியிருந்த போதிலும், ஆடம்பரத்துக்கான மின்சார விளக்கொளியும் பலவித வர்ணங்களில் திகழ்ந்து கொண்டிருந்தன. பந்தலில் தொங்கிக் கொண்டிருந்த மலர்ச் சரங்களுடன் சிறு குழந்தைகள் உறவாடிக் கொண்டிருந்தன. தங்கள் பணததின் பெருமையையும், அலங்காரத்தின் அருமையையும் எடுததுக் காட்டுவதுபோல் விலை உயர்ந்த நகைகளையும் உடைகளையும் அணிந்தவாறு பெண்கள் இங்கும் அங்குமாகச சென்று கொண்டிருந்தனர்.

''எதிர்த்த வீட்டு கீதாவுக்குக்கூட கலியாணம் வந்து விட்டது'' எனற மனைவியின் குரல் என் கவனத்தைத் திருப்பியது. ''எல்லோர் வீட்டிலேயும்தான் வந்துகொண்டிருக்கிறது கலியாணம்'' என்றேன் மனக்கசப்புடன்.

''நம் வீட்டில் என்று தான் வருமோ தெரியவில்லை. வரததான் போகிறதோ அலலது இப்படியேதான் இருந்து விடுமோ' என்ருள் என மனைவி, வேதனை நிறைந்த குரலோடு.

வீணையை மீட்டிக் கொண்டிருந்த சாரு, பாதியில் அபபடியே நிறுத்திவிட்டாள் தன் தாயின் பேச்சைக் கேட்டு. ஏதோ பெரிய குற்றம் புரிந்துவிட்டவளைப்போல் அவள் முகத்தில் கவலை படர்ந்தது.

பெண்டுபிள்ளை ஆட்சிவளம் பெற்றிருந்தும், நற்சனகர்
கொண்ட துறவுள்ளம் கூர்ந்தறிவர் யோகிகளே.

இதை கவனித்ததும் என் கோபம் உச்ச நிலையை அடைந்தது. "லக்ஷ்மி! பேசாமல் இருக்கமாட்டாயா? என்ன பேச்சு பேசுகிறாய் குழந்தையின மனது புண்படும்படி?" என்று கத்தினேன்.

"எனக்கு மட்டும் என்ன இளநீர் அபிஷேகம் செய்த மாதிரியாகவா இருக்கிறது. நெஞ்சு குமுறலில் தானே கூறுகிறேன். சாருவைவிட இளம் பெண்களுக்கும், மட்டமான பெண்களுக்கும் கலியாணமாகி விட்டதே, நம் வீட்டுக் குழந்தை இபபடியா நிற்கவேண்டும்? அந்த சப்ஜட்ஜ் வீட்டுக்கு இன்னும் இரண்டுமுறை போய்விட்டு வரக்கூடாதா? குறைந்தா போய்விடுவீர்கள்?" என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள் லக்ஷ்மி.

போவதற்கும் ஒரு கணககுக் கிடையாதா? பெண்ணைப பெற்றுவிட்டால் என்ன? அவ்வளவு இளப்பமா? எவ்வளவு தரம் போய்வந்து விட்டேன்! பிடி கொடுத்துப் பதில் சொன்னால தானே அந்த மனிதர்! பையன ஐ. ஏ. எஸ். பரீக்ஷை எழுதியிருக்கிறான். அவ்வளவு தானே! அது பாஸாகும் என்று என்ன நிச்சயம்? ஆராவமுது ஐயங்கார் பெண்ணைக் கொடுத்து, அந்த பையன் டபாஸ் போட்டதுபோல் ஆகிவிட்டால் எனன செய்வது சொல்? அவரும் ஐ. ஏ. எஸ். பரீக்ஷை எழுதின நம்பிக்கையில் தானே கொடுததார். இப்பொழுது பார், கிளார்க வேலைக்கு லாட்ரி அடிக்கிறான்.

"இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால முடியுமா? ஏதாவது ஒன்றை முடிக்க வேண்டியதுதான.

அபபடி என்ன அவசரம் வந்துவிடடது இப்பொழுது? குழந்தையை அப்படி யொன்றும் கணட இடத்தில் கொண்டு தள்ள முடியாது. நல்ல வரன் கிடைத்தால் கலியாணம் பண்ணிக் கொடுப்போம் போதும்" என்றேன சிறிது அழுததமாக.

வையத்து வாழ்வாஙகு வள்ளுவர்போல் வாழ்கினற
மெய்யறத்தர், இன்றுந்தான மேதினியில் உள்ளனரே.

"இந்த மாதிரி பிடிவாதமாக இருந்தால் கலியாணம், கலியாணம்தான். யாரையும் போய்ப் பார்க்கமாட்டேன். எதையும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தால் எப்படி?'' என்று கூறிவிட்டு உள்ளே சென்ருள் அவள். எரிமலை ஒன்று நகர்ந்து செல்வதுபோல் இருந்தது அவள் போக்கு.

கையிலிருந்த பாகவதத்தை மறுபடியும் புரட்ட ஆரம்பித்தேன். அப்பா என்று மெல்லிய குரலில் அருகில் வந்து அழைத்தாள் சாரு.

என்னம்மா ?

அம்மா சொல்வதும் சரிதானே அப்பா. எதையோ ஒன்றை முடித்து விடுங்கள். என் அதிர்ஷ்டம் என்று இருந்து விட்டால் போகிறது. எனக்காக நீங்கள் இருவரும் இப்படி மனக்கஷ்டப் படுவதை நான் பார்க்க விரும்பவில்லை அப்பா'' என்ற தளர்ந்த குரல் அவளிடமிருந்து வெளிவந்தது,

அயர்ந்து போனேன் நான். சாரு இவ்வளவு வேதனையா அனுபவித்துக் கொண்டிருக்கிருள்! வெறும் குழந்தை யென்று எண்ணிக் கொண்டிருந்தோமே! இவ்வளவு பொறுப்பு தெரிந்தவளாக ஆகிவிட்டாளா? இந்தக் கவலைகள் எல்லாம், எப்படி அவளிடம் புகுந்தன என்ற பல கேள்விகள் என்னுள் எழுந்தன.

"நீ எதற்கு சாரு இப்படி அலட்டிக் கொள்கிருய்? மனக்கஷ்டம் என்ன எங்களுக்கு இதில்? நீ கவலைப்படாதே அம்மா என்று கூறி அவளை உள்ளே அனுப்பினேன். பாவம், குழந்தை. ஏன்தான் இப்படி கஷ்டம் வருகிறதோ? வாழ்வை ரசித்து அனுபவிக்க வேண்டிய ஒவ்வொரு நாளும், சாருவுக்கு வீணுகிக்கொண்டு வருகிறதே! இதற்கு முடிவு என்றுதான் கிடைக்கும்? குழம்பிய மனதுக்கு சாந்தி யளிக்க விரும்பியவனுய்

குசேலர் வாய்மைக் குறிப்பறிந்து கொண்ட
சுசீலை போல், உத்தமத தோகையரும் உள்ளனரே.

பாகவததைத வைத்துவிட்டு, கோவிலை நோக்கிப் புறப்பட்டேன். கஷ்டம் நிலையை மீறும்பொழுது, கோவில் ஒன்றுதான் சற்று சாந்தியைக் கொடுக்கக்கூடிய இடம் எனபது சிறிதுகாலமாக நான் அறிநத உண்மை. காரியாலயமும் அன்று விடுமுறை. இல்லையெனில், அதுவாவது கடமை எனற கயிற்ருல் நம்மை இழுத்து, நிலைமையை மறக்கடித்து சிறிது சமாளிக்க உதவும்.

கால்கள் கோவிலை நோக்கி நடந்தனவே தவிர, மனது வேறு விஷயங்களில் லயித்திருந்தது. என பெண் சாருமதி, அப்படி யொன்றும் அறிவிலோ, அழகிலோ குறைந்தவள் இல்லை. சந்தன நிற மேனி கொண்ட அவள் எல்லா வகை யிலும் சிறந்து விளங்குகிருள். வீணை வாசிப்பு, தையல், சமையல, கார் ஓட்டல் என்று எல்லா வகையிலும் தேர்ச்சி பெற்றிருக்கிருள். பெரிய கனவைக் கண்டு கொண்டு, மிகுந்த உயர்ந்த ரக பெண்ணுக அவளை வளர்த்தாகி விட்டது. ஆனுல் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்க வில்லையே; பெண்களுக்கு இருக்கும் சாமர்த்தியம் ஏனோ இந்தக் காலத்துப் பையன்களுக்குக் காணேம்? எஸ். எஸ். எல். ஸி. தாண்ட மாட்டேன், எண்பது ரூபாய்தான் சம்பாதிபபேன என்பவ னுககு, இவ்வளவு நல்ல பெண்ணை எப்படிக் கொடுப்பது? கொஞ்சம் பையன் நல்ல பதவியில் இருந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம். லாட்ரி சீட்டு விழுந்த மாதிரித்தான் அவன பெற்ருேர்களுக்கு. ஐம்பது ஆயிரம் என்று விலை கூற ஆரம்பித்து விடுகிருர்கள். அந்தப் பையன் வாழ்நாள் முழு வதிலும் கூட அவ்வளவு சமபாதிபபானு என்பது சந்தேகம் தான். இப்படி இருக்கிறதே விவகாரம். அதற்கென்று நல்ல கெட்டிக்காரப பெண்ணை எங்கேயாவது கொண்டு தள்ள முடியுமா? இநதப் பிரச்னைக்கு முடிவே கிடையாதா

அந்நாள்போல் நலலவர்கள் இன்றுமுளர்; ஆயாமல்
இன்றில்லை யெனறுரைத்தல, நன்றலல என்றறியே.

என்றெல்லாம் ஏங்கித் தவித்தது என் உள்ளம். அந்தக் குமுறல் குன்றுக்கு முற்றுப் புள்ளி வைப்பதுபோல், கோவில் மணி அடித்தது. அர்ச்சகர் தீபாராதனை செய்து கொண்டிருந்தார். திரும்பிய என காதுகளில் பெரியவர் ஒருவர் பாரதத்துக்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்தது கேட்டது. "திரௌபதி தன் கரத்தால் வஸ்திரத்தைப பிடித்துக் கொண்டு கண்ணனைக் கூப்பிட்ட பொழுது கண்ணன் உதவிக்கு வரவில்லை. திரௌபதி தன்னால் முடியும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்று நினைக்கும் பொழுது, எனக்கென்ன வேலை அங்கு என்றான் அந்த யசோதா புததிரன். திரௌபதி இரு கரங்களையும் கூப்பி, கண்ணா, உன்னை யன்றி எனக்கு யார் கதி என்று சரணாகதி யடைந்தவுடன் விரைந்து வந்து அவளைக் காப்பாற்றினான் அந்தக கோபாலன். 'ஆகையால் பகவானிடம் சரணாகதி எனறு கூறிவிட்டால், மேல் பொறுப்பை அவனே பார்ததுக் கொள்வான்' என்று கூறி முடித்தார்.

என் உடல் ஒரு முறை சிலிர்த்தது, உண்மை தான். நானும் ஏன் என் அருமை மகள் திருமணத்தைப் பகவானிடம் ஒப்படைத்து இருக்கக் கூடாது? நான் செய்கிறேன, நான் பார்க்கிறேன என்று எவவளவு முட்டாள் தனமாக நடந்து கொண்டு விட்டேன என்று என உள்மனம் இடித்துக் கூறியது. மாபெரும் உண்மையை எடுததுக் கூறியவரை ஒரு முறை பார்த்தேன். என கரங்கள தானாகவே குவிந்தன. ஜகத் ரக்ஷகா! நீதான் கதி. என் பெண் வாழ்வு மலர அனுக்கிரகம் பண்ணு அப்பா என்று மனப்பூர்வ சரணாகதி அடைந்தேன். வீடு திரும்பிய பொழுது பெரிய சுமை ஒன்றை இறக்கியது போல் தோன்றியது. படைத்தவன் இருக்க நான் யார் கவலைப் பட? என்றால் என்ன செய்ய முடியும? விதியை வகுததவன் அவன. அவன அழைததுப போகும் சாலையில்

நல்லாரும் தீயாரும், நாட்டில் இருப்பார்கள;
எல்லோரும் தீயோர் எனறெண்ணல், நனறனறே.

மௌனமாகப் போக வேண்டியது தானே என்ற எண்ணம் மேலிட்டது. காலையில் வேதனையைக் கிளப்பிவிட்ட நாதஸ்வர இசையால், இப்பொழுது என்னை ஒன்றும் செய்ய முடிய வில்லை. அவரவர் செய்வினை பலன் என்று எண்ணியது உள்ளம். பெருந்தன்மையும், நிம்மதியும் பரவ, காலத்தை நோக்கிப் பார்க்க ஆரம்பித்தேன்.

நேரம் யாருக்காக நிற்கிறது? மத்தியான வேளை நகர்ந்து சாயந்திரப் பொழுதும் வந்தது. வெளியில் சிறிது சுற்றி விட்டு வரலாம் என்று புறப்பட்ட பொழுது, "சௌக்கியமா மாமா" என்றவாறே ராமு உள்ளே நுழைந்தான்.

"அடெடே, ராமுவா, வா அப்பா! வா, எப்பொழுது வந்தாய்?" என்றவாறு அவனை வரவேற்றேன்.

"இப்பொழுதுதான் வந்துகொண்டே இருக்கிறேன் மாமா."

"அப்படியா, மிகவும் சந்தோஷம். எங்கு வேலையில் இருக்கிறாய்? எவ்வளவு நாள் லீவில் வந்திருக்கிறாய்? என்று, ஆனந்தத்தை அளவிட முடியாமல் சரமாரியாகக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தேன்.

"நாளைக்கு செங்கல்பட்டில் வேலையை ஒப்புக்கொள்ள வேண்டும் மாமா. இந்தத் தடவை ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணி னேன். டிரையினிங் முடிந்து வருகிறேன். நீங்கள் செய்த அனுக்கிரகம் தானே. நாளைக்கு வேலைக்குப் போகுமுன், மாமியையும் உங்களையும் பார்த்து, ஆசீர்வாதம் பெற்றுப் போக லாம் என்று வந்தேன்" என்றான் அடக்கத்துடன்.

"ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணி விட்டாயா? அதிர்ஷ்டசாலி தான் அப்பா" என்றேன். ராமு எங்களுக்கு தூரத்து உறவு.

இல்லாள்சா வித்திரியா யிருந்தாளேல், நற்கணவன்
வல்லாளன், ஆயுள் வளர்வாளன் ஆவானே.

தாய் தந்தை இல்லாத அவனை எஸ். எஸ். எல். ஸி. வரை படிக்க வைத்தேன். பிறகு எனக்குப் பாரமாக இருக்க விருப்பு மில்லாமல் வேலை ஒன்றைத் தேடிக்கொண்டு வடக்கே உத்தி யோகமாகப் போன அவன், ஓய்வு நேரத்தில் படித்துப் பட்டம் பெற்றது மட்டும் எனக்குத் தெரியும். ஆனால் ஐ. ஏ. எஸ். ஆபீசராக என் முன வருவான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

"ராமு! என்ன சொலவது என்றே தெரியவில்லை. சந்தோஷம் பேசத் தோன்றவில்லை. நீ எங்காவது நனருக, செலவாக்கோடு இருந்தால் சரி. அதுவே போதும்" என்று அவனை வாஞ்சையோடு இறுக அணைத்துக் கொண்டு கூறி னேன். எனக்குமேல் அவன் வளர்ந்திருந்தாலும், ஒரு குழந்தையைப் போல் தான் அவன் எனக்குத் தோன்றினான்.

"மாமி, சாரு எல்லாம் எங்கே மாமா?" என்றான் அவன்.

"இதோ உள்ளே இருக்கிறார்களே" என்று நான் சொல்லிய பொழுது, வைத்த கண் வாங்காமல் சாருவையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"சாருவா மாமா இவள்? ஆறு வருஷத்தில் எப்படி வளர்ந்து விட்டாள்!" என்றான் வியப்புடன்.

பெண்கள் வளர ஆறு வருடங்கள் போதாதா என்ற நான், "அது சரி ராமு, உன் கலியாண விஷயம் என்ன? பண்ணிக் கொண்டு விட்டாயா?" என்றேன் ஆவலோடு.

உங்களுக்குத் தெரியாமலா மாமா. இனிமேல் தான் எல்லாம். நீங்கள் அல்லவோ அந்தக் கவலையையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள்" என்றான் லேசாக சிரித்தவாறு.

பற்றற்ற மோத்கலியர், பத்தினி நளாயனியால்,
முற்றும் புகழ்கொண்ட முன்கதையை எண்ணுவமே.

"அப்படின்னு நம்ம சாருவை பண்ணிக் கொள்கிருயா ?" ஆயிரமாயிரம் உணர்ச்சிகளோடு போட்டியிட்டவாறு வந்தது அந்த வார்த்தைகள்.

"நானு ? அது எப்படி மாமா ? எனக்கு சொத்து ஒன்றும் கிடையாது. உங்கள் உதவியால் படித்தவன் நான். எனக்கு என்ன அவ்வளவுக்கு இருக்கிறது ?" என்று இழுத்தான் அவன்.

"நீ ஏன் அப்படி குறைத்துக் கொள்கிருய் உன்னை ? அதுதான பெரிய பதவிக்கு இன்று வந்து விட்டாயே ? சாமர்த்தியம் இருக்கும் பொழுது சொத்தைப் பற்றி யார் நினைக்கிருர்கள். உனக்கு சம்மதமா ? தயங்காமல் கூறிவிடு" என்றேன் அன்பு கலந்த கண்டிப்புடன்.

"கரும்பு தின்னக் கூலியா மாமா" என்ருன் அவன் நகைத்தவாறு.

அவ்வளவுதான. காலையில் வீட்டில் நிலவியிருந்த மௌனமும், வேதனையும் விடைபெற்றுக் கொண்டது. கலியாண களை வீட்டில் மெருகு ஏற்றியது. சந்தோஷ ஆரவாரம் பரவ ஆரம்பித்தது. நாணம் கலந்த அழகு, சாருவின முகத்தை வசீகரப்படுத்தியது.

அடுத்த பதினைந்தாம் நாள் சாருவின் கழுத்தில் மாங்கல்யம் ஏறிய பொழுது, ஊரே அவள் அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்தது. என் மனைவி லக்ஷ்மி பெருமையால் தலை நிமிர்ந்து நடந்தாள். சாரு ஐ. ஏ. எஸ். மனைவி என்ற தோரணையாக உல்லாச நடை போட்டாள். ஆனுல் என் மனதில், அதெல்லாம் தனியான ஒரு மாறுதலையும் உண்டு பண்ணி விடவில்லை. " திரௌபதி இரு கரங்களையும் கூப்பி, " கண்ணு

பாண்டிமா தேவி, கூன் பாண்டியரை வாழ்வித்த
ஈண்டு வரலா(று,) உளத்தை இன்புறுத்து கின்றதரோ.

உன்னையன்றி எனக்கு யார் கதி " என்று சரணாகதி யடைந்த வுடன் விரைந்து வந்து அவனைக் காப்பாற்றினான் அந்தக் கோபாலன்" என்று அந்த பெரியவர் கூறிய வார்த்தைகள், காதில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. சரணாகதி என்று கூறியவுடன், எங்கேயோ இருந்த ராமனைக் கொண்டு வந்து கொடுத்து விட்டாரே அந்தப் பகவான். 'கலியாணங்கள் சொர்க்க லோகத்தில் செய்யப்படுகின்றன ' என்று கூறுவதன் தாத்பர்யம் இதுதான் போலும் என்று எனக்குள் கூறிக் கொண்டேன். " பெருமானே ! உன் அருளால் இணைக்கப் பட்ட இந்த இரண்டு குழந்தைகளின் வாழ்வும், அன்பும் இன்பமும் பிணைந்ததாக இருக்க அனுக்கிரகம் செய் " என்று மனப்பூர்வமாக அந்த தெய்வத்திடம், சரணாகதி யடைந்து, கையிலிருந்த மலர்களை மணமக்களின் மேல் வர்ஷித்தேன். சாலையை வகுக்க ஒருவன இருக்க, அதில் நடக்க வேண்டிய நான், அதன் அமைப்பைப் பற்றிக் கவலைப் படுவானேன், கஷ்டப்படுவானேன் என்று நினைத்த பொழுது, சந்துஷ்டியும் அமைதியும் என்னிடம் பரவியது. ஆனந்தக் கண்ணீர் கண் களில் மல்க, சிரித்த வண்ணம் அக்கினியை வலம்வரும் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டே நின்றேன் நான்.

* * * *

சீதை சிறைப்பட்டும் சீரழிந்த தில்லை ;யிந்த
நீதி, மனோதர்ம நேர்வென் றறிமனமே !

சமரஸம் 2.

எஞ்சிய கீதை

(ரஸபதி)

பகல் எல்லாம் பயங்கர யுத்தம். விஜய்ன் மகன் அபிமன்யு, வீர சுவர்க்கம் அடைந்தான். அச் செய்தியை அர்ச்சுனன் அந்திபபொழுதில் அறிந்தான். அதிர்ந்தது மனம். அலறி அழுதான். என் மகன் இறநதபின, யான் இருக்க மாட்டேன. வீழ்கினறேன நெருப்பில் எனறு விரைந்தான்.

கணணனும், தரும அண்ணனும, அவனைத் தடுத்து நிறுத்தப்பட்ட பாடு, போதும் போதும் எனறாகிவிட்டது. நாளை காலையில் போர். பரிதி மறையுமுன், பழிக்குப்பழி வாங்குவேன். இயலாதேல், தீயில் வீழ்வேன என்று பிரதிகஞை செய்தான் தனஞ்செயன்.

சுபத்திரையின் சோகம், மருமகள் சுந்தரியின் ஒப்பாரி, தருமனது பொருமல், வீமனது கதறல், மற்றவர்கள் அழுகை பொறுகக முடியவிலலை.

அர்ச்சுனா ! எனற அலறல். அதிர்நது திரும்பினன். அவன் கையைப் பிடித்தான கணணபிரான். இழுத்துச் சென்றான. இருவரும் ஒரு வனத்தை அடைந்தனர்.

தனஞ்சயா ! வெள்ளி மலைக்குச் செல்வம். பாசுபதம் பெறுவம். விடிவதற்குள் மீள்வம். நீ காலையில் புசிததவன். இன்றெல்லாம் அதிர்சசி. கண்ணை மூடுகிறது களைப்பு. இவை கனிப் புசி. சிறிது இளைப்பாறு. பிறகு புறப்படுவம் என்று, அவன்முன் கனிகளை வைத்தான் கண்ணபிரான்.

மாமா ! சிவபூசை செய்யாமல், ஒருவாய் நீரும் இதுவரை உட்கொண்டது இல்லை.

காண்டிபா ! சேற்றால் சுவர் உயரும் ; சோற்றால் உடல் வளரும் ; இது அனனமய கோசம். பததும் பசி வந்திடப் பறந்துபோம். வரத சிவத்தை, இங்கேயே வழிபடு ; அதன் பின் இதை உண் !

விதுரனளி கொய்க்கஞ்சி கண்ணன் விரும்பி,
மதுரமென வுண்டதனை, யாம்மறக்க லாவதுவோ.

மாமா! பாசறையில் உளது பூசைப் பெட்டகம். இப்படி வருவதை அறிந்திருந்தால், அதை எடுத்து வந்திருப்பேன்.

கவலையை விடு! காரியத்தை நினை! தாவும் உள்ளத்தைத் தடுத்து நிறுத்து! ஏதம் இன்றி, எனனை சிவமாக எண்! பரம இத் திருவுருவை, மனத்தில பதித்துக் கொள்! அங்கங்களிலும், சிரத்திலும் அரிய மலர்களை இடு! உருத்திர மந்திரத்தை உருவேற்று! இப்படியே சகஸ்ரநாம அர்ச்சனை செய்! கண்ணுதல் திருவுள்ளம் களிப்படையும். நினைத்த எண்ணமும் நிறைவேறும்.

மாமா! சிவலிங்கமாக உம்மைச் சிந்திப்பது எப்படி?

கோபாலன், தன திருவடிகள் இரண்டையும், குந்துகால் ஆக்கினன். அக்காலை, இரு கரங்களாலும் யோகப் பட்டை போல் கட்டினன். இரு கரங்களின் பத்து விரல்களையும், கும்பிடும் தன்மைபோல குவித்து நீட்டினன. முதன்மைச் சிவலிங்க மூர்த்தம்போல் ஆயினன். பிரமன், திருமால், உருத்திரன் எனும் மூவர் சொரூபம் சிவலிங்கம்.

காண்டிபன், கண்ணன் கொண்ட கோலம் கண்டான். களித்தது மனம். முன் இருந்த சுனையில் மூழ்கி எழுந்தான். திருவருள் துணையால, எதிரில் பூசா திரவியங்கள் இருந்தன. அது, மாதவன் உரு எனலை மறந்தான். சிவத்திருமேனியென்றே சிந்தித்தான். அபிடேகித்தான. அலங்கரிததான். ஆயிரம் நாமத்தாலும் அர்ச்சித்தான். வலம் வந்தான். ஏகாங்க, திரியாங்க, பஞ்சாங்க, சப்தாங்க, அட்டாங்க, நவாங்க, தசாங்க, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான்.

ஹரஹர சம்போ! ஆதியே போற்றி!
புரமூன் றெரித்த புனிதா வணக்கம்!
பிறவி யறுக்கும் பிஞ்ஞகா நமः
அறவிடை யூரும் அண்ணல் அடைக்கலம்!

என்று துதிபல பாடித் தொழுதான். உயர்ந்த ஐந்தெழுத்தை உருவேற்றி உருகினுன். அரிய தியானத்தில் ஆழ்ந்தான். தன் வசம் கெட்டான். பரவசப் பட்டான. நெடுநேரம் இந்த நிலை. அதுகண்ட கண்ணன திருவுள்ளம் களித்தது.

அனறு குசேலர் அவல்சுவைதத பேரருளை,
இன்றெண்ணி, கோவிநதா! என்கிறது நம்மனமே.

பக்தியால் சித்திபெற்ற பற்குன ! உத்தமனுன உனக்கு, அன்று கீதையை உபதேசித்தேன். அதனில் எஞ்சிய பகுதியை இப்போது கேள் !

ஹரி, ஹரன் எனும் பெயர்ச்சொற்கள் இரண்டு. அவை களில் உள்ள பொருள் ஒன்று. தாமச, இராஜச குணங்கட் குத் தக்கபடி, இது குறித்த சமய சச்சரவுகள் சகத்தில் இருக் கும். தெய்விக சாத்வீகர்கள், அப்பெயரின திருவருட் சொரூபம் தெரிந்தவர்கள் ; அவர்களைப் பின்பற்றுவதுதான் அறம்.

திருமாலைப் போற்றி வாழ்.

சிவததைப் பேணில் தவத்திற்கு அழகு எனும் இந்த எளிய சூத்திரங்களை மறந்தவர்கள், கர்மச் சேற்றில் காலாழ்ந்து, கண்கலங்கி நிற்பார்கள்.

பங்கயனுகிப் படைக்கின்றேம் ; கருமுகில் வண்ணனுகிக் காக்கின்றேம் ; இன்ப உருத்திரனுகி, இளைப்பாற்றுகின்றேம் ; மகேசனுகி மறைக்கின்றேம் ; சதாசிவமாகி சாந்தியை விளைப்பேம்.

ஒரு உருவும் ஒரு பெயரும் இல்லாத யாம், உயிர்களின் நலம் கருதி, பல வுருவும் பல பெயரும் கொள்கின்றேம் ; அநத நுட்பத்தை, அநுபூதிமான்கள் அறிகின்ருா.

" தாழ்சடையும் நீண்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்,
சூழரவும் பொன்னுணும் தோனறுமால—சூழும்
திரணடருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒனரு யிசைந்து "

என, ஆழ்வார் ஒருவர் அறிவிப்பும் செய்கின்ருர். இந்நுட்பம் ஓராதார்,

" அரனதிகன் உலகளந்த அரியதிகன என்று ", போராட்டம் நடத்திப் பொலிவிழந்து போகினருர்.

நீ, எம் எந்தெந்த அஙகத்தில், எந்தெநத மலர்களை வைத்திருக்கிருய் ! அதை இபபோதே குறித்துககொள் ! அந்த அடையாளபபடி, அமலசிவன் அஙகங்களில, அவ்வந்த மலர்

கனிமொழியும், அன்பும், பணிமுகமும் கண்ட
அனுமன் மனநிலையை, நாமடைவ(து) என்றேயோ.

கள் இருக்கின்றனவா இல்லையா என்று, கயிலாயம் சென்ற பின் கண்டுகொள்!

பரந்தாமனாகிப் பரமபதத்தில், பாம்பணைமேல் பாற்கடலில், கண்ணுதலாகிக் கயிலையில இருக்கும் எம் அருள் நாடகத்தை, அருந்தவம் மிக்கவரே அறிய இயலும். வாதம் எழுப்பும் வீண் வாதநோயாளர்கள, தாமும் கெட்டு மற்றவரையும் தாழ்விப்பர். இந்த நேரத்திற்குப் போதும் இவ்வுபதேசம் என்றார், அந்தப் புருடோத்தமர்.

இப்படிக் கீதை போதம் செய்த மாதவன், காண்டீபனுடன், காய்கனிகளைப் பசித்தான்போலப் புசித்தான.

எதிர் வந்தான் கருடன். கண்ணனைத் தோளிலும், காண்டீபனைக் கரத்திலும் ஏந்தினன். விண்ணில் விரைந்தான். இருவரும் சென்றனர். கயிலையில் இறங்கினர்.

ஏராளமான சிவகணங்கள், நின்மாலியங்களை வாரிக் கொண்டு வருகின்றனர். குன்றுபோல் எழ, அடிவாரத்தில் கொட்டுகின்றனர். அச்செயலில் பெரிதும் அயர்கின்ற அவர்களை, இருவரும் அறிந்தனர்.

கணத்தவர்களே! இபபடி ஏராளமான மலர்களால், இறைவனை வழிபடும் அன்பர்கள் எங்குளர்? என்றான் கண்ணன.

பாண்டவர் ஐவர் பாரிலுளர். அவர்களுள் ஒருவன் வீமன். அவனது மானச வழிபாட்டு மலர்கள் இவை என்றார்கள் அவர்கள்.

அடடா! அண்ணன் உண்பான் ஏராளமாக; உறங்குவான் நீண்டநேரம்; அவ்வளவு தான் எனறு, மட்டரகம் ஆக மதித்தோமே! சிவ பக்தியில் சிறந்த அவர் தம்பியா அடியேன் என்று, மகிழ்ந்தது விஜயன் மனம்.

அதன் பின், அமலர் திருமுன் இருவரும் அணுகினர்.

"பொஙகரா வெயில்மணிப் பூணும் பூணினாய்!
அங்கரா கமும்உகந் தணியும் மேனியாய்!

விதுரன் உபதேசம், வீணான தென்ற
மதியில் துரியகுடி, மாண்டொழிந்து போனதுவே.

சங்கரா ! மேருவெம் சாபம் வாங்கிய
செங்கரா ! சிவசிவா ! தேவ தேவனே !

என்று போற்றிப் புகழ்ந்தார் கண்ணபிரான்.

"தருவதும், உயிரெலாம் காக்கும் தன்மையும்,
உருவற ஒழித்தலும், உன்றன் ஆடலே !
கருவரா(து) ஒழிந்தவர் கருத்திற் கண்டுதேர்
ஒருவனே ! எம்மனோர்க்(கு) உரைக்கற் பாலையோ ?

என்று பாடித் தனஞ்சயன் பரவினன்.

தானாகிய கண்ணன் தரணியில் உதித்ததும், பூபாரம் தீரப் புரிசெயலும், தனக்கு அயலாக இருந்து தன்னைத் துதிப்பதும் கண்டு, கண்காட்டி நகைத்தார் கண்ணுதலார். அதன் பின், பரிவொடு கேட்ட பாசுபதமும் அருளினர்.

வனத்தின் வழிபட்ட போது கண்ணன் அங்கத்தில் வைத்த மலர்களை, விமலர் திருவுருவில் கண்ட விஜயன், வியந்தான்.

சிவத்தை நோக்கினான் ; புனித முராரியே என்று போற்றினான். கண்ணனை நோக்கினான் ; புராரியே என்று, போற்றிப் பெயரை மாற்றிப் புகழ்ந்தான். மாசறக் கற்றும் மெய்ம்மைச் சொருபத்தை மறந்த மாதவர்க்கும், அட்சரமே அறியாத அகதிகட்கும், வழிபட இருந்த உருவம் இருவுருவம். அனுபூதிமான்கட்கு, ஈருருவும் ஒருருவம் என்று எண்ணி மகிழ்ந்தது அவன் இதயம். கண்ணனைத் தொடர்ந்து இன்றுவரை காத்தான். பாண்டவர் சகாயன் ; பஞ்சவர்கள் நேயன் என்று பார்புகழ நின்றான்.

தவம் இருந்த காலத்தில, வேடுவனாய் வந்து தனிப்பேறும் தந்தான். இன்று கயிலைக்கு இழுத்தான. அயலான் போல்,

---

கொடுஞ்சொல் சிசுபாலன் கூறி யழிந்த
படுகேட்டை எண்ணிப், பழுதுரைத்தல் ஆகாதே. ...

தூய சிவத்தை என்னோடு தொழுதான். ஆஹா! அறிவில்லா எளியேற்கு, இந்த அருளாடல் ரகசியத்தை அறிவித்தல் செய்தான். வாழி அவனருள். வாழி கீதை. வாழி அடியவர் கால்வழி என்று வாழ்த்தினான். நர நாரணரான நாம், நல்லார்க்குத் தொல்லை தரும் துட்டர்களைத் தொலைக்க வந்தோம். நினைவிருக்கட்டும். புறப்படு என்று கண்ணன் புகன்றபடி, மீண்டான். போரில் வெற்றி பூண்டான். ஹரிஹர பஜனை செய்து, இறுதி வரை இனபங் கொண்டு இருந்தான. பாரத வரலாற்றுள், இதுவும் ஒரு போதம்.

விஜயன் கண்ட சொருபத்தை, அன்பை அகலாக்கி, ஆர்வத்தை நெய்யாக்கி, இதயத்தைத் திரியாக்கி, மோன ஞானத் தீ மூட்டி, ஒளி வளரும் விளக்கேற்றிச் சேவித்து, புகழ்ந்து தொழுதார் பூதத்தார். பாருங்கள் அவர் பாடுவதை!

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா, நண்புருகி, ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு, ஞானத் தமிழ்புரிந்த நான்:

ஆ! என்ன அருமை!

தேகமே மாளிகை. அதனில் இருந்த அகமே அகல். உணர்வே நெய். உயிர்ப்பு திரி. இப்படி ஏற்றி வைத்த பின், திகு திகு என்று பிரகாசிக்கிறது தீபம். அந்த ஒளியில், கடப்பமலர் மாலையணி கந்தன் தந்தையான எந்தையைக் காண்மினகள், அன்பர்காள்! காண்மின்கள் என்று, பூதத்தார் போல் காட்டுகின்ற அப்பரை, மறக்க முடிவதில்லை மனம்.

"உடம்பெனும் மனையகத்தே உள்ளமே தகளியாக,
மடம்படும் உணர் நெய்யட்டி, உயிரெனும் திரிமயக்கி,
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்,
கடம்பமர் காளை தாதை, கழலடி காணலாமே!

கர்னனுக்குப் பின்னர் கொடையிலலை எனறதனை,
இந்நாளில் மாறற, எவர்தோன்று வாரேயோ?

அடடா! என்ன அற்புதமான அனுபவம்! இந்த இருவர் குரலிலும் இருந்த செய்தி ஒன்று தானே!

கிருஷ்ண பகவான், அர்ச்சுனற்குக் கீதையைப் போதித்தார். பின்வந்தவர்கள், அதில் அகப்பட்ட பகுதிவரை, ஒரு நூலாகத் தொகுத்தனர். எஞ்சிய பகுதிகள், தல புராணங்களில் ஏறி யிருக்கின்றன. பாரதத்தும், முன்னும் பின்னும் ஏராளமான செய்திகளாக இருக்கின்றன. எஞ்சிய கீதை எனும் தலைப்பிட்டு அவைகளைத் தொகுத்தால், புதையல் தனம்போல், சைவ வைணவ சமரச செய்திகள், அளவிலாது வெளிப்பட்டு நம்மை ஆநந்தத்தில் ஆழ்த்தும்.

மதி தெளிந்து கண்ட நெறிக்கு, மதம் என்று பெயர். அதனுல் வருவது இதம். எம்மதமும், அடிப்படையில் நல்லவை. இயற்கை பிறழாமல், சொரூப ஆட்சி இது என்று சிந்தனை செய்து சிலையை நோக்கினுல், உள்ளம் உருகும்; உருகிய உயிர்முன் கல்மறையும்; அது கடவுள் திருவுரு. உளத்தில் நெகிழ்வு உதித்திலதேல், அக்கல்லில் கரந்து விடும் கடவுள் சொரூபம். ஆஸ்திகத்தில் உள்ள இந்த அருமையை மறந்து, வாய்வாதம் செய்து வாழ்நாள் கழிப்பாரை, கடவுள் பெருமான்தான் காப்பாற்ற வேண்டும்!

வாழ்க உலகம்.

ஓம்.

காலத்தால் செய்த உதவி கருதுவது,
ஞாலத்தில் நன்மை; அதை நாம்மறக்க மாட்டோமே.

6. நக்கீரர்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

(2-ம் பகுதி நக்கீரரும் பூதமும்)

நக்கீரர் குட்டநோயால் வருந்தி கயிலைகாண வடதிசைப் பயணங் கொண்டார்.

'என்றினி மதுரை காண்பேம், எப்பகல் சவுந்தரேசன்
தன் திருவடிகள் காண்பேம், தாயை யென்ஞான்று காண்பேம்,
வென்றிவேல் தருமவேந்தர் வேந்தனை எந்நாட் காண்பேம்,
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத் துறவை எப்பொழுதுகாண்பேம்'

(சீகாளத்தி புராணம்)

எனக் கூறித் துக்கத்துடன் புறப்பட்டனர். சிவ நமோ நம! குக நமோ நம! என்ற தியானத்துடன் வழி நடந்து முதலில் பரங்குன்றத்து அறுமுகப் பரமனைப் பணிந்து, பின்னர் பழமுதிர்சோலை மலைகிழவோனைப் போற்றித், தென் திசையி லுள்ள செந்திற் செவ்வேளை வணங்கி, வடதிசை யாத்திரை யைத் தொடங்கி, திருவாவினன்குடி, திருவேரகம் (சுவாமி மலையைத்) தரிசித்துத் திருவலஞ்சுழியை அடைந்தனர். அங் குப் பெருமான்மீது 'திருவலஞ்சுழி மும்மணிக் கோவை' என்னும் நூலைப் பாடிச் சமர்ப்பித்துச் சோழநாட்டிலுள்ள 'தில்லை'யாதி பிற தலங்களைத் தரிசித்து 'ஒரு *மூவரில் இரு சீலர் உதித்தற் கிடமான' நடுநாடு சேர்ந்தார். அங்குள்ள சிவ தலங்களையும், குமரன் தலங்களையும் தரிசித்துச் 'சான்றோ ருடைத்து' எனப் போற்றப்படும் தொண்டை நாட்டை அடைந்து அங்குக் கச்சி ஏகம்பம், குமரகோட்டம் ஆதிய

* மூவர் - சம்பந்தர், அப்பர், சுந்தரர். இருசீலர் - அப்பர், சுந்தரர்.

உற்றபஞ்ச காலத் துமாபதியை வேண்டி, ஒரு
நெற்கோட்டை பெற்றடியர்க் கீந்தநல்லான், நல்லானே.

திருக்கோயில்களை வணங்கித் தணிகாசலம் வந்து சேர்ந்தனர். அங்கு உளம் இன்புற, உடல் நெக்குற, உரோமங்கள் பொடிப்ப, "புளகங்கொடு தணிகேசர்தம் பொன்னங்கழல் போற்றி" பின்னும் வடக்கே யாத்திரை கொண்டார். வடக்கே பல ஊர்களைத் தாண்டி ஏமகூட மலையை அடைந்து அங்கு நீராடி, முருகவேளைப் போற்றிப் பின்னும் பல காத தூரம் நடந்து நந்தி நகரை அடைந்து, கந்தவேளின் அடி போற்றி காசி நகர் வந்து சேர்ந்தார்.

அங்குச் சில நாள் தங்கி, கயிலையைக் காணவேண்டிப் புறப்பட்டு, காடு மலை கடந்து செல்லும்போது ஒரு அழகிய தடாகத்தைக் கண்டார். அங்கு நீண்டு, உயர்ந்து, அகன்று விரிந்த ஒரு பழைய ஆலமர நிழலில் முருகவேளின் திருவடியை நினைந்து அமர்ந்தனர். அப்போது ஓர் ஆலிலைப் பழுப்பு அருகிலிருந்த பொய்கையின் நீரினிற் பாதியும் நிலத்தினிற் பாதியுமாய் வீழ்நதது. நீரிலுற்ற பாதி ஒரு மீனுகவும் பாரிலுற்ற பாதி ஒரு பறவையாகவும் மாறி ஒன்றையொன்று ஈர்த்தது ; இதனைப் பாவலர் கண்டனர். கந்தவேளின் திருவடி தியானத்தில் இருந்த அவர் மனம் வேறுபட்டு இந்த அற்புதக் கூத்துக் காட்சியிற் சென்றது.

அப்போது தடாலென்று கோரைப் பற்களுடனும், கொதித்தெழு கண்களுடனும், மடித்த வாயுடனும் ஆங்கு ஒரு பூதம் தோன்றிப் புலவரை எடுத்துச் சென்று அவரைக் குகையில் அடைத்து, 'என வயிற்றிற்கு இரை இன்றே வாய்த்தது என்று திட்டமிட்டு நீராடச் செனறது. அபபோது அக் குகையில் முன்னரே அப் பூதத்தால் அடைக்கப்பட்டிருந்த தொள்ளாயிரத்துத தொண்ணூற் ஞெனபது பேர்களும் "குறைஒன்றும் நிரர்பி ஆயிரம்பேர்" ஆகிவிட்டோம். இன்றே

ஒருபருக்கை கண்ணற் குதவி யுயர் பாஞ்சாலி,
துருவாசர் சாபமிலாத் தொல்பெருமை எய்தினளே.

நமக்கு முடிவுநாள் வந்து விட்டது என்று கலங்கி முணு முணுத்தனர். 'நாங்கள் பகலிரவைக் கண்டறியோம்; பல காலம் இக் குகைவாயிற் பட்டிருந்தோம். *இப் பூதத்தின் எண்ணம்போல நம்முடன ஆயிரவர் ஆயினேம்; இன்னும் சிறிது நேரத்தில் நாமனைவரும் பூதத்தின் அகல் வயிறறிற்கு இரையாவோம்" என நக்கீரரிடம் கூறிக் கலங்கினர்.

(தொடரும்)

---

* இந்தப் பூதம் குதிரை முகத்துப் பெண்பூதம் என்பது பின்வரும் அருணகிரியார் வாக்கினுல் புலப்படுகின்றது.

1. " அருவரை திறந்துவன் சங்க்ராம [1]கற்கிமுகி
அபயமிட அஞ்சலென் றங்கீர னுக்குதவி.

(பூத - வகுப்பு)

1. கற்கி - குதிரை.

2. " எதிரில்புல வர்க்குதவு வெளிமுகடு முட்டவளர்
இவுளி முகியைப் பொருத ராவுத்த னுனவனும்
வேடிச்சி காவலனே."

(வேடிச்சி காவலன் வகுப்பு)

3. " இயல்முநி பரவ ஒருவிசை அருவரை யூடதி
பார கோர [2]இவுளி முகத்தவள்
கொங்கை கொண்ட சண்ட மார்பைப் பிளந்தன
வாகைப் புயஙகளே."

(புய வகுப்பு)

2. இவுளி - குதிரை.

கணவன்உடன் பிறந்தாளைக் கண்கலங்கச் செய்தவள்தான்,
மணமில் மனையறத்தில் மாய்ந்தொழிந்து போவாளே.

HARMONY OF THE WORLD

Love is and has been the universal solvent of the bitterest of conflicts that have torn asunder men and nations. Hence the great savants, from time to time, called on the world to develop the heart of love, the path of love and the goal of love - which we call Bhakti. Every man starts with love of himself. The instinct of self-preservation is as wide as the world. Culture dawns when man seeks to know the self to be loved. The masters of wisdom have declared all over the world that God is love. "அன்பே சிவம்" declared the Saivite Saints of the South.

"அன்பெனும் நனமலர் தூவி
ஆனந்தத் தேவன் அடியிணைப போற்றி
இனபமாய் உன்னுடல் ஆவி
ஈடேற்றுவாய் நீ இங்கே குலாவி"

Love is the flower of the heart. We are asked to strew the same over one and all. For it is inexhaustible. The pale of love must absorb the whole world. As all beings are limited, the expression of universal love gets limited in action in a differentiated world. The limitation is still of universal love. The basic essence of love is the joy of sacrifice, the desire for the well-being of all else. The

greatest sacrifice that man may offer to God is the annihilation of ahankara, the separatist "I". The joy of that sacrifice is the realisation of God.

The world is a school of training. It is the school where man is taught to forego. It is through "Thyaga" that man attains realisation. The bedrock of every religion is Thyaga, if properly understood.

Hence Thyaga is basic of love; God is love and Siva is the King of Love - Thyagaraja.

A life of Thyaga is a life of Tapas. Sacrifice or suffering willingly offered is tapas.

God-love is God-life. It is Divine life. The devotees of the one God of the universe, whatever differing expressions there may be in material surroundings, in name or form, live the universal life of Love and Truth. The universality of the element of all love in every religion is necessary to be understood and enjoyed and lived before the world can march on to the Peace that passeth understanding. May the Love and the Reality of the masters of wisdom help the world out of its present travail. May the Lord so bless.

Thiruppugal Mani.

347

நீர்கொண்டுதண் மலர்கொண்டுநன்
னெறிகொண்டுநின் குறிகொண்டுவண்
சீர்கொண்டுவந் தனைசெய்துனைச்
செறிவார்களென் பெறுவார்களோ ?
பேர்கொண்டிலன், பொறிகொண்டிலன்,
பெரியோர்களால் அருள்கொண்டிலன்
நார்கொண்டுகந் தருள்சோதியே
நாராயணா நாராயணா. (நார் - அன்பு.)

No 15069
ASOKA

Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) PRIVATE LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924, Phone: 113



குடை மார்க் பினாயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49. சைடன ஹாம ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி
1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத தொகையை அனுப்பும்படி
ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, நந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)